-Germany: 1,25DM, Switzerland: 1,30SFs, France: 6frs, U.K: 60P, Canada: $1.25, Denmark: 6kr, Holland: 1.50 Gul-

# இளைஞன்

இளைஞன்

ஆவணி -2000 மாத இதழ்-ஜெர்மனி வருடம்-08 இதழ்-45 திருவள்ளுவர் ஆண்டு-2031


ELAIGNAN TAMIL MONTHLY - www.elaignan.de

## 113 பலியான விமானவிபத்து பற்றி புதிய தகவல்

(பக்கம் 2)







## மகாத்மா காந்தியும் ஹிட்லரும் ஜாதகரீதியான ஒரு கண்ணோட்டம்

(பக்கம் 8)

## கடலுக்கு அடியில் நடந்த திருமண நிச்சயதார்த்தம்

கனடா நாட்டை சேர்ந்த இளம்பெண் மேரி இஸ்ரபாத். மனோதத்துவ நிபுணரான இவர் ஜோர்டான் நாட்டுக்கு சுற்றுலா சென்றார். அங்கு அவருக்கு வழிகாட்டியாக (கைட்) ஜானி என்பவர் கிடைத்தார். இருவரும் மனம் விட்டு பேசினார்கள். ஜோர்டான் சென்றபோது இருவருக்கும் இடையே காதல் மலர்ந்தது. திருமணம் செய்து கொள்ள முடிவு செய்தனர். இருவரும் ஒருமுறை ஜோடியாக கடலில் நீந்தி குளித்தபோது ஜானிக்கு ஒரு யோசனை தோன்றியது. திருமண நிச்சயதார்த்தத்தை கடலுக்கு அடியில் வைத்துக்கொள்ளலாமா? என்று மேரியிடம் கேட்டார். அதற்கு மேரியும் சம்மதித்தார்.

அதைத்தொடர்ந்து ஜோர்டான் கடற்கரை நகரமான அகாபா அருகே மத்திய தரைக்கடலில் 60 அடி ஆழத்தில் அவர்களது நிச்சயதார்த்தம் நடந்தது. இருவரும் மோதிரம் மாற்றிக்கொண்டனர். அந்த காட்சி வீடியோவில் படமாக்கப்பட்டது.



ஜோர்டானில் இருந்து இஸ்ரேல் படைகள் வெளியேறிய சந்தோஷத்தை கொண்டாடவும் மேரிக்கு என்னுடைய அன்பை தெரிவிக்கவும் கடலுக்கு அடியில் நிச்சயதார்த்த நிகழ்ச்சியை நடத்தியதாக ஜானி கூறினார்.

## கந்தப்புவும், சோமண்ணையும்

*கந்தப்பு:-* சுந்தரத்தானின் மனுசிக்கு கழுத்து வலியென்று டாக்குத்தரிட்ட போனால், அவர் வெயிற்றை குறைக்கச்சொல்லி சொல்லுகிறாராம்.

*சோமண்ணை:-* சுந்தரத்தானின் மனுசி ஒல்லித்தடி மாதிரி. அதிலையும், இன்னம் வெயிற்றை குறைச்சால் எப்பிடியிருக்கும்?

*கந்தப்பு:-* டொக்டர் சொன்னது மனுசியின்ர வெயிற்றை இல்லையாம்

*சோமண்ணை:-* அப்ப எதையாம் ?

*கந்தப்பு:-* சுந்தரத்தானின் மனுசியின் கழுத்தில் இருக்கிற 70 பவுன் தாலிக்கொடி, 25 பவுன்தங்கச் சங்கிலியின்ர வெயிற்றையாம்

*சோமண்ணை:-* ? ? ?

-கவிஸ் அகதியார்-

GNANAM Telecom Centers GmbH

ஈழத்தமிழ் மக்கள் மத்தியில் விரைவான, நம்பகமான, மலிவான, தொலைபேசி அட்டைகள் என அழைக்கப்படுவது-
**ஞானம்** தொலைபேசி அட்டைகளே!



FRANKFURT
Taunus Str. 52-60
60329 Frankfurt/M
Tel: (069) 27133-501/502
Fax: (069) 27133-510

மொத்த வியாபாரிகளுக்கு விஷேட கழிவுண்டு!



உலகுவாழ் இளைஞருக்கான இளைஞரின் புதுமைப் பிரவாகம்!

http://www.thamizham.net
FREE E-BOOKS (TAMIL)-1089/09

# என்ஜினில் தீ பிடித்ததால், விமானத்தை அவசரமாக இறக்க முயன்றபோது தரையில் மோதியது: 113 பேர் பலியான விபத்து பற்றி புதிய தகவல்

பாரீஸ், ஜூலை - பிரான்ஸ் நாட்டின் தலை நகர் பாரீசில் இருந்து, அமெரிக்காவில் உள்ள நியூ யார்க்கிற்கு நேற்று முன்தினம் ஒரு விமா னம் புறப்பட்டது. இந்த விமானம், பிரான்ஸ் ஏர்வேசுக்கு சொந்த மானதாகும். கன்கார்டு வகையை சேர்ந்த சூப்பர் சோனிக் ஜெட் விமானம் ஆகும்.

இந்த விமானத்தில் 100 பயணிகளும், விமானிகள் உள்பட 10 விமான பணியாளர் களும் இருந்தார்கள். விமானத்தில் இருந்த 100 பயணிகளும் ஜெர்மனியை சேர்ந்தவர்கள் ஆவார்கள். அவர்கள் உலகச் சுற்றுலாவுக்காக அமெரிக்காவுக்கு செல்ல திட்டமிட்டிருந்தார்கள்.

பாரீசில் இருந்து புறப்பட்ட இந்த விமானம், சார்லஸ் டி கால் விமான நிலையத்திலி ருந்து புறப்பட்ட சில நிமிடங்களிலேயே தடுமாறத் தொடங்கியது. நடுவானில் அந்த விமானத்தில் என்ஜின் பகுதி தீப்பற்றிக் கொண்டது. ஆகவே அந்த விமானத்தை விமானிகள் மீண்டும் தரை இறக்க முயற்சித்தார்கள். அதற்குள் தரையில் விழுந்து நொறுங்கியது.

**நெருங்க முடியவில்லை**

அந்த இடத்தின் பக்கத்தில் ஒரு நட்சத்திர ஓட்டல் அமைந்து உள்ளது.

சொகுசு ஓட்டல் அருகில் உள்ள வயல் வெளியில் விமானத்தின் சிதறல்கள் விழுந்து தீப்பற்றிக்கொண்டன. அதனால் அந்த இடம் முழு வதும் ஒரே புகை மண்டலமாக காட்சி அளித்தது.

300 அடி உயரத்திற்கு தீப்பந்தமாக விமானம் எரிந்து சிதறியது என்று அதை நேரில் பார்த்தவர்கள் கண்ணீர்மல்க தெரிவித்துள்ளனர். வெடி குண்டு வெடித்ததை போல் சத்தம் கேட்டது என்றும் அவர்கள் தெரிவித்து உள்ளனர். விமானம் விழுந்த இடத்தின் அருகில் யாரும் நெருங்க முடிய வில்லை.



**113 பேர் பலி**

பயணிகளில் 50 பேர் பெண்கள், 47 பேர் ஆண்கள், 3 பேர் குழந்தைகள். இந்த விபத்தில் விமானத்தில் இருந்த 109 பேர்கள் இறந்தனர். இறந்தவர்களில் 100 பேர் பயணிகள். 9 விமான ஊழியர்கள் பலியானார்கள். விமான ஊழியர் ஒருவர் அதிர்ஷ்டவசமாக பிழைத்துக் கொண்டார். விமானம் விழுந்த இடத்தில் நடந்து சென்ற 4 பேரும் பலியானார்கள்.

சம்பவம் பற்றி அறிந்தவுடன் தீயணைப்பு அதிகாரிகள் அப்பகுதிக்கு விரைந்தார்கள். ஹெலிகாப்டர்களில் பறந்தும் தீயை அணைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

**கிளிண்டன் அதிர்ச்சி**

பிரான்ஸ் பிரதமர் லயனல் ஜோஸ்பின் உள்பட மந்திரிகள் அங்கு விரைந்தார்கள். சம்பவம் பற்றிய செய்தி அறிந்தவுடன் ஜெர்மன் பிரதமர் ஷ்ரோடர் அதிர்ச்சி அடைந்தார். அமெரிக்க அதிபர் பில் கிளிண்டனும் அதிர்ச்சி அடைந்தார். இறந்த வர்களின் குடும்பத்திற்கு ஆறுதலையும், அனுதாபத்தையும் அவர்கள் தெரிவித்து உள்ளனர்.

**காரணம் என்ன?**

இந்த விமான விபத்திற் காரணம் என்னவாக இருக்கும் என போலீசார் விசாரணை நடத்தி வருகிறார்கள். ஒரு வேளை நாசவேலை காரண மாக இருக்குமோ? என்ற கோணத்தில் விசாரணை நடக்கிறது.

"இளைஞனால் உலகில் ஒன்றிணைவோம்!"

இளைஞன்

முகவரி:
ELAIGNAN
Ginnheimer Str, 24 a
60487 Frankfurt/M
Germany
Tel: 0049+170-4074933
eMail: sekar@ilaignan.com
www.ilaignan.com

அச்சுப்பதிப்பு: சிந்துநதி பதிப்பகம்

Editor: Artist SEKAR
ஆசிரியர்: ஓவியர் சேகர்

இணையாசிரியர்:
ஏ.ஜே.ஞானேந்திரன்

துணையாசிரியர்:
ரவிசெல்லத்துரை

நமது நிருபர்கள்:
கொழும்பு: ஆர்.பார்த்தீபன்
சென்னை: எம்ஆர்ஜி

சந்தா விபரம்:
சகல நாடுகளுக்கும்
ஒரு வருடம்: 25 DM
(தபாற் செலவுடன்)

"இளைஞன்" பிரதிநிதிகள்:

லண்டன்:
S.Thaasan
39, Westbury ave
Wembley Middex
HAO4sj
London (UK)

சுவிற்சலாந்து:
A.J.Gnenthiran
Post Fach, 118
4127 Birsfelden
Basel (CH)
Tel: 061-3 11 25 44
Tel: 061- 3 12 08 55

Visit: www.kathala.com



Tamil Chat
Love Tips
Tamil Love Songs
Kaikku Kathal
Kathal Kavithaikal

இனையக் காதலர்களின் இதயநாடி காதலா.com

# சிந்திப்பதற்கு ஒரு துணுக்கு!

அது ஷு தயாரிக்கும் ஒரு பன்னாட்டு நிறுவனம். தனது கம்பெனியின் ஷுக்களுக்குக் குறிப்பிட்ட ஓர் ஆப்பிரிக்க நாட்டில் எவ்வளவு டிமாண்ட் இருக்கிறது என்று தெரிந்து கொள்ள கம்பெனியின் முதலாளி அந்த நாட்டுக்கு ஒரு மானேஜரை அனுப்பினார். போன வேகத்திலேயே தனது நாட்டுக்குப் பறந்து வந்த மானேஜர், அந்த நாட்டில் நாம் ஷுக்களையே விற்க முடியாது! என்று

ரிப்போர்ட் கொடுத்தார். ஏன்? என்று கேட்டதற்கு, அவர் சொன்ன பதில்... அந்த நாட்டில் யாருமே ஷு அணிவதில்லை! முதலாளி, முடியாது என்ற வார்த்தையை அத்தனை சுலபமாக ஏற்றுக்கொள்ளும் ரகம் கிடையாது. அதே ஆப்பிரிக்க நாட்டுக்கு இன்னொரு மானேஜரை அனுப்பினார். அந்த நாட்டுக்குப் போய் ஸ்டடி செய்துவிட்ட இரண்டாவது மானேஜர், சந்தோஷத்தில் துள்ளிக் கொண்டு முதலாளியின் அறைக்குள் ஓடிவந்து சொன்னார் - நமது கம்பெனியின் ஷுக்களுக்கு அங்கே மிகப்பெரிய மார்க்கெட் இருக்கிறது! எப்படி..? என்று அவரிடம் முதலாளி கேட்டார். அதற்கு இரண்டாவது மானேஜர் சொன்ன பதில்...அந்த நாட்டில் யாருமே ஷு அணிவதில்லை!

## சிந்திக்கவும் சிரிக்கவும்...

மும்பையின் ஜுஹு கடற்கரையில் சந்நியாசி ஒருவர் ஹாயாக கைகால் நீட்டிப் படுத்திருப்பதை வியாபாரி ஒருவன் பார்த்து, "ஒவ்வொருவரும் காற்றாகப் பறந்து வேலை செய்துகொண்டிருக்க, நீ மட்டும் ஏன் வெட்டியாகப் படுத்துக் கொண்டிருக்கிறாய்? என்று கேட்கிறான். அதற்குச் சந்நியாசி, வேலை செய்தால் என்ன பயன்? என்கிறார். வேலை செய்தால் பணம் கிடைக்குமே...
பணம் கிடைத்தால்..?
வீடு மற்றும் வசதிகளைத் தேடிக்கொள்ளலாம்.
வீடு வசதிகள் கிடைத்தால்...
கை - கால் நீட்டி நிம்மதியாகப் படுத்துத் தூங்கலாமே! சிரித்துக்கொண்டே சந்நியாசி சொன்னார்: சரிதான்... இப்போதும் நான் அதைத்தானே செய்துகொண்டிருக்கிறேன்!

(இந்தக் கதையை நிறையப் பேர் தப்பாக அர்த்தம் செய்து கொள்வார்கள்! உழைக்காமல் சோம்பேறியாக இரு என்று போதிப்பதற்காகச் சொல்லப்பட்ட கதை அல்ல இது! )

# சிரித்திரன்

ஓட்டலுக்குச் சாப்பிட வந்தவர் சர்வரிடம், "ஒரு வடை, ஒரு காப்பி, கொஞ்சம் அன்பான வார்த்தை..." என்று ஆர்டர் பண்ணினார்.

வடை, காபியைக் கொண்டு வந்து வைத்த சர்வர் சொன்னார்.

"அன்பான வார்த்தை கேட்டீர்களே...சொல்கிறேன். இந்த வடை போன வாரம் போட்டது!"


---

வாசகர்களே! தங்களிடமிருந்தும் இதுபோன்ற ஜோக்குகள், துணுக்குகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

(ஆ-ர்)

---





# தடயம்

(ஆசிரியரின் பாராட்டைப் பெறுகிறது இக்கவிதை)

இந்த முட்களில்
எது
என் மலர்?

இத்தனை வகிடுகளில்
எது
என் பாதை?

இந்த நந்தவனத்தில்
எது
என் வேர்?

இத்தனை உடைகளில்
எது
என் உடல்?

இத்தனை மனிதர்களில்
எது
என் ஆதாம்?

இத்தனை நடைகளில்
எது
என் கால்?

இத்தனை விரைவுகளில்
எது எனை விரும்பும்
இலக்கு?

இத்தனை போராட்டங்களில்
எது என்
வெற்றி?

இத்தனை இடங்களில்
எது
என் பதிவு?

இந்தப் பூமியில்
எது
என் மண்?

**ஏ.தேவராஜன்**, மலாக்கா மலேசியா

## உங்கள் எழுத்துக்களை மதிக்கிறோம். எண்ணங்களை வரவேற்கின்றோம்!

**"இளைஞ"னில் இடம் பெற வேண்டும் என்று விரும்பி நீங்கள் அனுப்பும் கதை, கட்டுரை, கவிதைகள் ஒவ்வொன்றும் அக்கறையோடு அலசப்படும் என்பதை அறியுங்கள். எங்கள் அலசலின் சிரமத்தைக் குறைக்க கொஞ்சம் ஒத்துழையுங்களேன் தயவு செய்து:**

* உங்கள் கற்பனையில் உள்ள தெளிவை, எழுத்திலும் காட்டுங்கள். வெள்ளைத் தாளில் சுத்தமாக இடைவெளிவிட்டு, ஒருபக்கத்தில் மட்டும் எழுதுங்கள்.
* புனைபெயரில் எழுதுபவர்கள், படைப்பின் இறுதியில் உங்கள் உண்மைப்பெயரையும், முழு முகவரியையும் தெளிவாக எழுதுங்கள்.
* உங்கள் ஆக்கங்களை அனுப்ப வேண்டிய முகவரி:

*ELAIGNAN*
Ginnheimer Str. 24 a
60487 Frankfurt/M
Germany
www.elaignan.de
Tel: 069-70760470
eMail: sekar@elaignan.de

**நாய் மனிதனைக் கடித்தால் அது செய்தியாகி விடாது. ஆனால், இதே மனிதன் அதே நாயைக் கடித்தால் அது சுடச்சுட ஒரு செய்தியாகி விடுகின்றது!**

## தெரிந்ததில் தெரியாதது

# புதினமும் நாமும்


நாய் மனிதனைக் கடித்தால் அது செய்தியாகி விடாது. ஆனால், இதே மனிதன் அதே நாயைக் கடித்தால் அது சுடச்சுட ஒரு செய்தியாகி விடுகின்றது. செய்தி என்பதற்குக் கூறப்படும் வரைவிலக்கணம் இதுதான். சரி! இந்தப் புதினப் பத்திரிகைகளின் கதை தெரியுமா? பத்திரிகைகள் தோன்றுமுன்னர் செய்திகள் வாய்மொழி மூலமே பரவியிருக்கின்றன. ஆதிமுதல் தமிழர்கள் வாய்மொழியாகப் பாடிவந்த தகவல்களின் பரிமாற்றமே சங்கப்பாடல்களாகப் பரிணமித்துள்ளன. பத்திரிகைகளின் முன்னோடியாக வந்தது கி.மு.131 இல் ரோமபுரி நகரின் பிரதான சதுக்கத்தில், அரச விவகாரங்களை இரு ஏடுகளில் எழுதி வெளியிட்ட ,,அக்டா பப்ளிக்கா,, என்ற செய்திப்பத்திரிகைதான். கி.பி.751 இல் சீனர்கள் காகித உற்பத்தியை அறிமுகம் செய்தார்கள். அலெக்ஸான்டிரியாவில் முதன்முதலாக நூல்நிலையம் ஆரம்பிக்கப்பட்டு 3250 வருடங்களுக்குப்பின்னரே, தகவல்துறையில் காகிதம் அறிமுகமாயிற்று. மாறக்கூடிய அச்சுக்கள் மூலம் பதிப்பிக்கும் முறையை ஐரோப்பியர்களுக்கு அறிமுகப்படுத்தியவர் துழுபுயுே புருவுவுநுடீேநுசுபு என்பவரே. கி.பி. 8 ம் நூற்றாண்டில்தான் தகவல் முறையிலான முதற் பத்திரிகையான ,,பீக்கிங் கஸெட்,, சீனாவிலிருந்து வெளியாகியது. 1911 இல் சீன சாம்ராஜ்யம் வீழ்ச்சியடையும்வரை 1200 வருடங்கள் தொடர்ந்து வெளிவந்த பத்திரிகை இது. தகவல் சேகரிப்பு பத்திரிகைகள் 1609 இல் ஜேர்மனியிலும், 1631 இல் பிரான்ஸிலும், 1945 இல் சுவீடனிலும், 1690 இல் அமெரிக்காவிலும் பிரசுரமாகி இருக்கின்றன.
தமிழ்ப்பத்திரிகைகள் உலகில், முதல் தமிழ்ப்பத்திரிகையான ,,உதயதாரகை,, 1841 இல் அமெரிக்க மிசனால் இலங்கையில் வெளியிடப்பட்டிருக்கின்றது. இரண்டாவது இடத்தைப் பிடித்தது, சென்னையில் வெளியிடப்பட்ட ,,தமிழ்ப்பத்திரிகை,, என்ற பெயரில் வெளியாகிய புதினப்பத்திரிகைதான்.
1877 இல் ஆரம்பிக்கப்பட்ட ,,இலங்கைநேசன்,, 1900 இல் திராவிட கோகிலம் என்று பத்திரிகைகள் முளைவிட்டு, 1930 இல் கொழும்பில் வீரகேசரி என்ற பெயரிலும், வடக்கில் ஈழகேசரி என்ற பெயரிலும் பத்திரிகைகள் ஆரம்பிக்கப்பட்டன. 1932 இல் தோன்றியது தினகரன். 1947 இல் பிறந்தது சுதந்திரன். 1959 இல்தான் ,,ஈழநாடு,, உதயமாகியது. 1966 இல் தினபதி, சிந்தாமணியும், 1966 மித்திரனும் தோன்றின.
ஈழப்பத்திரிகை வரலாறு இப்படியென்றால், ஐரோப்பாவின் முதல் நாளிதழ் எது? பாரிஸில் இருந்து வெளிவந்த ,,சுட்டுவிரல்,, என்ற நாளிதழ்தான்!

-ஏ.ஜே.ஞானேந்திரன்-


மொத்த வியாபாரிகளுக்கு

**20%**

வரை கழிவுண்டு!




**ஞானம் தொலைபேசி அட்டைகளை ஜேர்மனியில் மொத்தமாகப் பெற்றுக்கொள்ள அழையுங்கள்**

**சிறி**

**தொலைபேசி: 0175-3304727**

# இணையத்தளம்

## —தமிழ் இணையங்களின் சங்கமம்—

ரமேஷ் வவுனியன்.



# உங்களுக்குத் தெரியுமா?

பெற்றோர்கள் அல்லது கார்டியன்களால் கொல்லப்படும் அமெரிக்கக் குழந்தைகளின் எண்ணிக்கை ஒரு நாளைக்கு 5

1996இல் உலக வங்கி தாங்கமுடியாத கடன் தொல்லையால் அவதிப்படுவதால் உதவி தேவைப்படும் நாடுகள் என்று குறிப்பிட்ட எண்ணிக்கை 40

அவற்றில் கடன் சலுகை உதவி பெற்ற நாடுகள் 2

ரஷ்ய அணு ஆராய்ச்சி விஞ்ஞானிகளை வேலையில் வைத்துக்கொண்டிருப்பதற்காக அமெரிக்கா செலவிடும் தொகை 40 மில்லியன் டாலர்

ஆப்கானிஸ்தானில் தாடியை கத்தரித்ததற்காக கொடுக்கப்படும் சிறை தண்டனை - நாட்களில் 10

அமெரிக்கத்திரைப்படத்தில் அரபு மற்றும் முஸ்லீம் கதாபாத்திரங்களை - பேராசை,வன்முறை ஏமாற்று இவற்றின் உறைவிடமாக சித்தரிக்கும் படங்களின் எண்ணிக்கை 20 இல் 19

ஈராக், ஐ.நா உதவியோடு பெட்ரோலை விற்று இறக்குமதி செய்த கொழுப்பு குறைக்கும் எந்திரங்களின் எண்ணிக்கை 4

வீரிய விருத்தி மருந்துக்காக (Viagra) அமெரிக்க அரசாங்கத்தின் பாதுகாப்பு அமைப்பான பெண்டகன் (Pentagon) இந்த வருடம் செலவிடும் தொகை 40 மில்லியன் டாலர்

இந்தியாவின் அணுகுண்டு வெடிப்பை முதல் பக்கச் செய்தியாக வெளியிட்ட உலக செய்தித்தாள்களின் எண்ணிக்கை 500

குண்டு வெடிப்பை முன்கூட்டியே அறிவித்த C.I.A ஏஜண்டுகளின் எண்ணிக்கை 0

அமெரிக்காவில் பேயோட்டும் அனுமதி கேட்டு எழுதிய பாதிரிமார்கள் திருச்சபை மேலிடத்திலிருந்து பெற்ற அனுமதி எண்ணிக்கை : 90 சதவீதம்

சம்பளச் சிப்பந்தியின் தவறால் பிரிட்டிஷ் அரசு தவறாகப் பெற்ற அதிகப்படி தொகை (1991-லிருந்து) : 3 கோடி டாலர்கள்.

இந்தியா 100 கோடி ஜனத்தொகையை அடைந்த வருடம் : 2000

இதில் படிக்கத் தெரியாதோர் எண்ணிக்கை : 35 கோடி.

கணிவெடிகளை அகற்றுவதற்காக உதவி புரிய முன் வந்த அமெரிக்க கம்பெனிகளின் எண்ணிக்கை 5

உலகைச் சுற்றிலும் இயற்கையாக அமைந்துள்ள ஓஸோன் பாதுகாப்பு வளையத்தில் அண்டார்டிகா மீது விழுந்துள்ள ஓட்டை கடந்த வருடம் பெரிதான சதவீதம் + 37%

கிறிஸ்தவ மதபோதகர் பில்லி கிரஹாம் கணக்குப்படி சொர்க்கத்தின் கன அளவு 1500 கன மைல்கள்



### உலகத்தின் மக்கள்தொகை வளர்ந்தது எப்படி?

| ஆண்டு | உலக மக்கள் தொகை |
|---|---|
| 1000 | 30 கோடி |
| 1100 | 33 கோடி |
| 1200 | 38 கோடி |
| 1300 | 42 கோடி |
| 1400 | 46 கோடி |
| 1500 | 50 கோடி |
| 1600 | 60 கோடி |
| 1700 | 72 கோடி |
| 1800 | 100 கோடி |
| 1900 | 170 கோடி |
| 2000 | 600 கோடி |

# கணனிக் கட்டுரைகள் - 3

இணையத்தை உருவாக்கியவர்கள் யார்? எந்த நோக்கில் உருவாக்கப்பட்டது? இப்பொழுது இது யாருக்குச் சொந்தம்? போன்றவை உங்களுக்குத் தெரியுமா?

1957 களில் சோவியத் அரசு தனது ச்புட்னிக் என்னும் செயற்கைகோளை விண்ணில் ஏவி, வெவ்வேறு இடங்களுக்கு உடனுக்குடன் தொடர்புகொள்வதற்கான செயற்கைக்கோள் சார்ந்த ஒரு தொலைத்தொடர்புவலை அமைப்பை ஏற்படுத்தியது.

இதனைக்கண்டு அதிர்ந்த அமெரிக்க அரசின் பாதுகாப்புத் துறை, ARPA அதாவது Advanced Research Projects Agency என்ற ஒரு புதிய அமைப்பை உருவாக்கி, அதனிடம் கணினி சார்ந்த தகவல் தொடர்பு வலையமைப்பு ஒன்றை ஏற்படுத்தித்தருமாறு கேட்டுக்கொண்டது. கணினியை ஒரு கணக்குப்போடும் எந்திரமாகவெ பாவித்துவந்த அக்காலத்தில் அதனை ஒரு அதிவிரைவுத்தகவல் பரிமாற்ற சாதனமாக்கும் தனது நீண்ட நெடிய ஆராய்ச்சியில் இறங்கியது ARPA அமைப்பு. வெவ்வேறு இடங்களில் உள்ள கணினிகளை ஒன்றாக இணைப்பதற்கான கேட்பாடுகள் வடிவமைக்கப்பட்டன, தொலைதூரக் கணினிகளை தொலைபேசிக்கம்பிகள் வழியாக இணைப்பதற்கான வழிமுறைகளும் ஆராயப்பட்டன நீண்ட ஆராய்ச்சியின் விளைவாக 1968 ஜூன் மாதம் ARPA தனது ஆராய்ச்சியின் முடிவான ARPANET என்னும் கணினி வலையமைப்பினை அரசின் பார்வைக்குக் கொண்டுவந்தது.

இவ் ARPANET வலையமைப்பின் சிறப்பம்சங்கள் யாதெனில் இது வெவ்வேறு இடங்களில் உள்ள கணினிகளை வெவ்வேறு வழிகளில் ஒன்றாக இணைக்கிறது அதனால் ஒரு பகுதியில், இணைப்பில் ஏதேனும் கோளாறுகள் ஏற்பட்டாலோ, அல்லது போர்க்காலங்களில் ஒருபகுதி வலையமைப்பே துண்டிக்கப்பட்டாலோ பிற பகுதி எந்த விதப்பதிப்பும் இன்றி தகவல் தொடர்புக்குப்பயன்படும். ஏதேனும் ஒரு வழியை நம்பிக்கொண்டிருக்கவேண்டியது இல்லை.

(நம்முடைய இணையமும் அவ்வாறே! உலகின் ஒரு பகுதியே அழிந்து பட்டாலும் மற்றொரு பகுதி எந்த வித பாதிப்பும் அடையாமல் தன்னுடைய கடமையை ஆற்றிக்- கொண்டிருக்கும். இதற்குக்காரணம் இணையத்தில் பயன்படுத்தும் TCP/IP போன்ற கோட்பாட்டு மென்பொருள்களும், Router போன்ற சாதனங்களும் தகவல் பொட்டலங்களை அனுப்பும் போது பாதைகள் பாதிப்படையாமல் இருக்கின்றனவா என்று பார்த்துவிட்டே அனுப்புகின்றன எனவே அப்பொட்டலங்கள் பாதிக்கப்பட்ட உலகப்பகுதிக்குள் சென்று காலங்கடத்தும் வாய்ப்பே இல்லை)

அடுத்ததாக இவ்வமைப்பு வெவ்வேறு வகையைச்சார்ந்த, வேறுபட்ட அமைப்பில் உருவாக்கப்பட்ட அதாவது நாம் பயன்படுத்தும், IBM வகைத் தனிக்கணினிகள் APPLE MAC வகைக் கணினிகள், MAINFRAME, அதிவிரைவுக்கணிகள (SUPER COMPUTER) மற்றும் MINIக் கணினிகள் போன்ற கணினிகளையும் ஒன்றாக இணைத்து அவற்றிற்கு இடையிலும் தகவல்களைச் செலுத்தும் வல்லமை உடையதாக அமைக்கப்பட்டது இதனை ஆங்கிலத்தில் Machine Independant என்று கூறுவது உண்டு.

அதுமட்டுமல்லாது இது வேறுபட்ட வினைக்கலன்கள் (Operating System) பயன்படுத்தப்படும் கணினிகளையும் வெற்றிகரமாக இணைக்கும்படியும் உறுவாக்கப்பட்டது. இதனை ஆங்கிலத்தில் Platform Independant என்று கூறுவது வழக்கம். இத்தகைய ARPANET முதலில் அமெரிக்க இராணுவத்தில் பயன்படுத்தப்பட்டாலும், பின்பு ஆராய்ச்சிக்கான தகவல்களை பரிமாறிக்கொள்ளும் பொருட்டு அமெரிக்க பல்கலைக்- கழகங்களுக்கு இடையே ஒரு வலையமைப்பை ஏற்படுத்தி அதைத்தம்மோடு ஒன்றாக இணைத்துக்கொண்டது- பின்னர் இது வியாபார நோக்கில் அமெரிக்க நிறுவனங்களை தம்மோடு இணைத்துப் பின்.......உலகமெல்லாம் பரவி இணையம் என்னும் பெயரில் வழங்கப்படலாயிற்று.

இப்பொழுது இவ்விணையம் யாருக்குச்சொந்தம்?

குறிப்பிட்ட யாருக்கும் சொந்தமல்ல, அந்தந்த நாடுகளின் இணையத் தொடர்பை அந்தந்த நாடுகளே கவணித்துக்கொள்கின்றன, மற்ற நாடுகளுடனான அந்நாட்டின் தொடர்பை அவ்விரு நாடுகளும் ஒழுங்குபடுத்திக்கொண்டுள்ளன இருந்தாலும் வலைத்-தளங்களின் பெயர், தகவல் பரிமாறும் கணினிகளின் IP முகவரி போன்றவைதனிச்சீர்மை (unique) பெற்றவையாதலால் அவை உலகளவில் ஒழுங்குபடுத்தப்படுகின்றன

அதற்காக The Internet Corporation for Assigned Names and Numbers மற்றும் Internet Assigned Numbers Authority போன்ற உலகலாவிய ஒழுங்குபடுத்தும் அமைப்புகள் செயல்பட்டு அவற்றை நெறிப்படுத்துகின்றன.

தொடரும்...

விடியாத இரவுகள்
என்றைக்கும் இல்லை.
நம்பிக்கைதான் வாழ்க்கை!

ஏழைதாசன்-

# ஒரு துளி ஒளி

நீண்ட நாளைய
பூக்காத பூ
மலரப் போகிறது

நிறைய இயேசுகள்
இரத்தம் சிந்தியாதால்
இந்த மண்ணில்
பாவ தேகங்கள்
பிறக்கப் போவதில்லை

ஜென்ம அசுர தாகம்
தனியும்
சமர்ப் பொழிவு

இந்நூற்றாண்டின்
தமிழ்ப் பிறந்தநாள்
அகல் விளக்குகள்
ஏற்றியாயிற்று

நிமிஷச் செய்திகளில்
துளியாய்ச் சொட்டும்
உன் நாயகப் பவனி

கொடுத்து வைத்தது
உன்
சைனட் குப்பி

இதுவரை கொண்டாடிய
விழாக்கள்
எங்கள் யானைப்பசிக்குக்
கிடைத்த
சோளப் பொறிகள்

உரிமை கோஷங்களில்
வென்ற பித்தளைகளை
அணிந்துகொண்டு எங்கள்
இராஜப் பாட்டையில்
பஞ்சையாகப் பலநாள்
பயணத்தில்.....
ஒரு வியர்வைத் துளி
வைரமாகியிருக்கிறது

உன்
ஆன்மபல விரலுக்கு
எங்களை உருக்கி
மோதிரமாய்
அணிவிக்கிறோம்.

சிதறிய மொட்டுக்கள்
கழுத்துக் கேறும்
மாலைகளாய்....
உண்டு
தைரியமாய்ச் சாய
நமக்கொரு மண்!

**ஏ.தேவராஜன்,** மலாக்கா- மலேசியா

# மாதம் ஒரு நாடு

-புதிய பகுதி-


## வடகொரியா

"வடகொரிய துறைமுகம் ஒன்றின் அருகே அமெரிக்க கப்பல் ஒன்று கொக்கோ கோலா குளிர்பானப் போத்தில்களை இறக்கக்காத்துக் கொண்டிருக்கின்றது." இன்றைய இச்செய்தியில் என்ன புதினமிருக்கிறது என்று கேட்கிறீர்களா? சரித்திரத்தில் இடம்பெற்றுவிட்ட, இண்மைக்கால வடகொரிய, தென்கொரிய நாட்டுத் தலைவரிகளின் அபூர்வ சந்திப்பு முழுஉலகையுமே சந்தோஷத்தில் ஆழ்த்தியுள்ளது. 50 வருட இடைவெளியின் பின்னர், தனது வர்த்தகத் தடைகளைத் தளர்த்திவிட்டு, அமெரிக்கா கோலா அனுப்பும் அளவிற்குக் கோலம் மாறியிருக்கின்றது. இனி வடகொரியா பற்றிய தகவல்கள் இதோ...

வெளிநாடுகளுக்கு ஒரு "மூடுமந்திரம்" போல இதுகாலவரை இருந்துவந்த வடகொரியாவில் பஞ்சம் தலைவிரித்தாடி, பட்டினியோடு அலைந்தவர்கள், அலைபவர்கள் ஏராளம். வரட்டுக் கௌரவத்தோடு கம்யூனிஸத்தைக் தழுவிக்கொண்டு, தென்கொரியாவையும் சீண்டிக்கொண்டு வந்த வடகொரியா திடீரென மாறியிருக்கின்றது.

இதனுடைய விஸ்தீரனம் 120,538 ச.கி.மீற்றர். தலைநகரம் PZONGZANG. 1948 இல் உருவாக்கப்பட்ட வடகொரியா, 1950 இல் தெற்கை நோக்கிப் படையெடுத்து, மோதலில் இறங்க முற்பட்டு "வாலைச் சுருட்டிக்" கொண்டு திரும்பிவந்துவிட்டது. கம்யூனிஸ நாடான இது KIM IL SUNG என்பவரின் நீண்டகால ஆட்சியிலிருந்தது. இப்பொழுது மகனின் கைக்கு ஆட்சி மாறியிருக்கின்றது.

கை கோர்த்துள்ள இரு நாடுகளும் இணைந்தால், அதன் விளைவு அற்புதமாக இருக்கம் என்று சொல்லித்தான் தெரிய வேண்டுமா?



## தொலைக் காட்சியா? தொல்லைக் காட்சியா?

ஐரோப்பிய நாடுகளில் நம்மவர்களுக்கு நல்லதொரு பொழுது போக்குச்சாதனமாகத் திகழ்வது தொலைக்காட்சி என்பதில் சந்தகமே இல்லை. அதே சமயம் இதே தொலைக்காட்சி நிகழ்ச்சிகளே எம் பிள்ளைகளுக்கு தொல்லைக்காட்சி நிகழ்ச்சிகளாக அமைகின்றன என்பதை நாம் அறிவோமா?

பிள்ளகைளைப் பெற்றோர்கள் பக்கத்தில் வைத்துக்கொண்டு இரவு நேரங்களில் திரைப்படங்கள் பார்ப்பது நம்மவரிடையே தொற்றிக்கொண்டுள்ள ஒரு பழக்கமாகும். இப்படியான பழக்கம் பிள்ளைளின் எதிர்காலத்தைப் பாழடிக்கின்றது என்பதை நாம் கருத்திற்கொண்டாக வேண்டும். தமது பாடங்களைப் படிக்கும் இரவு நேரத்தில், நாம் எந்தக்காரணம் கொண்டும் திரைப்படங்களையோ அல்லது தொலைக்காட்சி நிகழ்சிகளையோ பெற்றோர்கள் பார்ப்பதைத் தவிர்த்தல் அவசியம். பள்ளிப் பாடங்களை முடித்துவிட்டு, உணவருந்தி நேரத்தோடு தூங்கவேண்டிய ஒரு பிள்ளகைக்கு, திரைப்படங்களோ அல்லது தொலைக்காட்சி நிகழ்ச்சிகளோ சபலம் ஏற்படுத்துபவையாக அமையக்கூடாது.

வார முடிவிலோ அல்லது பாடசாலை விடுதலை நாட்களிலோ இது அனுமதிக்கப்பட்டாலும், பாடசாலை நாட்களில் இரவு நேரங்களில், பிள்ளைகள் படுக்கைக்குச் செல்லுமுன்னர், தொலைக்காட்சியை அணுகுவதை பெற்றொர் அடியோடு தவிர்த்தல், உங்கள் பிள்ளைகளின் வளமான வாழ்விற்கு ஒரு தளமாக அமையும் என்பதில் எள்ளளவேனும் சந்தேகமில்லை.


அறிமுகம்!




Happytel
Gnanam
Mundophone
Median

போன்ற தொலைபேசி அட்டைகளை ஜேர்மனியில் மொத்தமாகப் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டியவர்—

நடா

செல்உலாபேசி: 0172 96 30 163





# மகாத்மா காந்தியும் ஹிட்லரும் ஜாதகரீதியான ஒரு கண்ணோட்டம்

மகாத்மா காந்தி அடால்ப் ஹிட்லர் இருவரும் மனித சமுதாயத்தில் இருவேற கோணங்களில் பார்க்கப்படுகிறார்கள்.
மனிதநேயம், அகிம்சை, சத்யாக்ரஹம் என்று பிறரின் மனம், உடல் ஆன்மா ஆகியவற்றுக்கு ஊறு ஏற்படாவண்ணம் வாழ்ந்தும் வாழ வழிவகுத்தும் உலகப்புகழ் பெற்றார் காந்தி.தனது கொடூரச் செயல்களால் உலகத்தின் கவனத்தைத் தன்பால் ஈர்த்தவர் ஹிட்லர். உலகத்தின் பார்வையில் கொடூரனாகத் தோற்றமளித்தாலும் தன் இன உணர்வு தனிமனித கருணை எந்று சில நல்ல குணங்களையும் ஹிட்லர் பெற்று இருந்தார். இவர்களின் இத்தகைய குணங்களைக் கொண்ட கிரக அமைப்புகள் என்ன என்பதைத் தற்போது ஆய்வோம்.


இருவருமே துலா லக்ன ஜாதகர்கள். இருவருக்குமே சனி மகாராஜயோகக்காரகன் ஆகிறார். ஆனால் காந்தியின் ஜாதகத்தில் சனி லக்னத்திற்கு 2ம் வீட்டில் அமர்ந்து குரு பார்வை பெற்றதால் சமுதாய நலன் கருதும் எண்ணம், செயல் பேச்சு அமைந்தது. ஹிட்லருக்கு சனி கர்ம ஸ்தானமான 10மிடத்தில் அமர்ந்ததால் போர்ச்செயல் புரியச்செய்தார். 10 மிடத்துச் கரி ஜாதகரை இறக்கிவிடவும் செய்வார். அதைப் போலவே ஹிட்லர்தோல்வியையும் சந்தித்தார். ஹிட்லருக்கு லக்னத்திலிருந்து 3ல் குரு கேது சேர்க்கை தனுர்ராசியில் சந்திரனுடன் இணைந்தது புவி ஆளும் யோகம். கஜகேசரி அளித்தது என்றாலும் அந்த நிலையே அவருக்கு பகையாகவும் மாறி மாரக நிலையையும் ஏற்படுத்தியதற்கு குரு 6 க்குரியவராகி அங்கு அமர்ந்தது. செவ்வாயின் தன்மை கொண்ட கேது குருவுடன் அமைந்து 10 க்குரிய, தொழிலுக்குரிய சந்திரனுடன் இணைத்து தைரியமாக சில காரியங்களை மேற்கொள்ளும் தன்மையைத் தந்தது காரணங்களாகின. இருவருக்குமே குரு மறைவு. ஆனால் காந்திக்கு 8 ல் மாறைந்ததால் அதிகாரமிக்க பிரதமர் பதவியில் அவர் அமரவில்லை. பிரதமர் பதவி மேல் ஆசையற்றவவகாவும இருந்ததற்கு விருச்சிக சனியே காரணம். தன் வாக்கால் எளிமை. பற்றற்ற தன்மையையும், பிறருக்காக தியாகம் செய்யும் மனப்பான்மை, உழைக்கின்ற தன்மை ஆகியவற்றை 2 ல் அமர்ந்த விருச்சிக சனி ஏஹ்படுத்தினார். குரு மறைந்ததால் ஆண் குழந்தைகள் அவருக்குப்பின் புகழ் பெறுவதற்கு வாய்ப்புகள் இல்லாமல் போனது. 10 ல் ராகு, 4 ல் கேது. சர ராசிகள் எந்பதால் தென் ஆப்பிர்காக,இங்கிலாந்து நாடுகளில் வாசம் செய்யும் நிலைமையும் வேறுமொழிக்காரர்கள் மீது அன்பும் பாசமும் கொண்டவராகவும் விளங்கினார். 12 ல் சூரியன் மறைந்ததாலும் அதிகாரம் உள்ள பதவிகளில் நாட்டம் இல்லதவராய் இருந்தார், லக்னத்தில் லக்னாதிபதியுடன் 9,12 க்குரிய பருதன், 2,7க்கு உரிய செவ்வாயுடன் அமர்ந்து சூரியன் மறைவால், சுடப்பட்டு ஆயுள் முடிவுற்றது. மாறாக செவ்வாய் நவாம்சத்தில் சூரியனுடன் (துலா லக்ன பாதகாதிபதி) இணைந்து சனி பார்வை பெற்றதாலும் சுடப்படும் தன்மை வலிமை பெற்றது. 12 க்குரிய புதன்லக்னத்தில் அமைந்ததால் இளமையில் வாழ்க்கை விரையம் செய்த மாதிரி தோற்றம் இருந்தாலும் அதுவே பின்வரும் மாபெரும் சாதனைக்கு அடிக்கல்லாக அமையும். குரு 8 ல் மறைந்து விபரீத ராஜயோகம் வழங்கினார். இவரைத் தாக்கி அடக்க பிரிட்டிஷ் அரசாங்கம் நினைத்த போதெல்லாம் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு, இவருக்கு மேலும் மேலும் மக்கள் செல்வாக்கு அதிகரிப்பதை உணர்த்தியது குரு வழங்கிய விபரீத ராஜயோகம். விபரீதங்களை இவருக்கு ஏற்படுத்தி அதையே சாதனையாக மாற்றச் செய்ய வைத்தது இந்த யோகமே.

ஹிட்லரைப பொறுத்தவரை ஷத்திரியத் தன்மையை லக்னாதிபதிக்கும் லக்னத்திற்கும் சூரியன உச்சம பெற்றும், செவ்வாய் ஆட்சி பெற்றும். புதன் சூரியனுடன் சேர்ந்து புதாதித்ய யோகம் ஏற்படுத்தியும் வரை அரசாள வைத்தது.
நவாம்ச லக்னத்தில புதனும் கேதுவும் சேர்ந்து செவ்வாயுடன் இருந்ததனால் முட்டாள்தனமான முரட்டுச் செயல்களையும், கொடூரச் செயல்களையும் தன்போக்கில் செய்தார். மரணத்தில் மர்மம் இருப்பதற்கும் இந்நிலையே காரணம். தற்கொலை அல்லது துர்மரணமே ஏற்பட வேண்டிய அமைப்பு இது.10 ல் சனி உள்ளவரிடம் பழமையாய் போற்றுகின்ற தன்மையும் (ஸ்வஸ்திக்கின்னம்) சண்டையிடுகின்ற தன்மையும், மக்களிடம் தொடர்பு கொண்டு தன்மைப்பிறரைத் துன்புறுத்திப பார்க்கின்ற ரசிக்கின்ற மனப்பான்மை ஏற்பட வழியுண்டு. சனிக்கு புதனின் சாரம் இருப்பதால் மூளையில் புதியதாக கொடுமைப்படுத்துகின்ற எண்ணங்கள் தோன்றும். குரு மறைந்ததாலும், இவருக்கு பகை கிரகம் என்பதாலும் வட்டித் தொழில் மற்றும் பணவவவு தொழில்களில் ஆதிக்கம் செலுத்தி வந்த யூதர்களைப் பிடிக்காமல் போயிற்று. அவர்களை செவ்வாய் பார்த்த சனி, 10 ல் அமர்ந்ததால் ராளமான கொல்லவும் செய்தார். துலா லக்னம் சுக்ரனிந் லக்னமானதால் இத்தாலி சுக்ர ஆதிக்கம் உடைய நாடு நபதாலும அந்நாட்டு முஸோலினியுடன் நட்பு கேது ஆதிக்கம் கொண்ட ஜப்பான் மீது, லக்ன கேதுவால் பாசம் இவருக்கு ஏற்பட்டது. லக்ன யோகன சனி என்பதால் இந்தியா மீது சற்று இரக்கம் இருந்தது. குரு முழுமையான யோகம் தரக்கூடிய கிரகமாக இவருக்கு இல்லை. அதன் காரணமாக அரசுரிமையை தன் ஆயுட்காலத்திலேயே இழந்ததும் அதன் அடிப்டையிலேயே மரணத்தைச் சந்தித்ததும் குருவின் அமைப்பே காரணமாகும். தொழில் மூலம் பகை ஏற்படுத்தி,பொருளாதாரக் கடன் நாட்டில் (இவரால்)ஏற்படுத்தி அதையே ரோகமாக ஆக்கி மாரகம் செய்தார் குரு லக்னாதிபதியை அதாவது சுக்ரனை விட, லக்ன யோகன் சனியையும் விட இவர்கள் இருவரது ஜாதகத்தில் ஆதிக்கம் செலுத்தி குருவே ஆகும்.

## இணையத்தில் இல்லாத மொழிகள் ஒதுக்கப்படும் அபாயம்!

இணைய தளத்தில் இடம் பெறாத மொழி இனி மெல்ல மெல்ல மக்களால் ஒதுக்கப்பட்டுவிடும் என்று சிங்கப்பூர் தொழில் வர்த்தக அமைச்சர் ஜார்ஜ் யோ எச்சரித்தார். மேலும் அவர் எழுத்து வடிவம் இல்லாத மொழிகள் வளர்ச்சி அடையாமல் பெரிதும் பாதிக்கப்பட்டன. அதுபோல் எதிர்காலத்தில் இணையத்தில் இல்லாத மொழிகள் ஒதுக்கப்படும் அபாயம் நிச்சயம் உள்ளதாகவும் கூறினார்.ஆனால் தமிழுக்கு அந்த அபாயம் இல்லை காரணம், தகவல் தொழில்நுட்பத்தில் இணைய வசதி தோன்றிய ஆரம்ப காலத்திலேயே நுழைந்துவிட்ட மொழிகளில் தமிழும் ஒன்று என்றார் அவர். முன்பெல்லாம் இணைய உலகத்தை ஆங்கிலமே ஆக்கிரமித்து வந்தது. ஆனால் இந்த கவலை இல்லை. தமிழில் 1995-ம் ஆண்டு சில நூறு தளங்களே இருந்தன. தற்போது, அந்த எண்ணிக்கை இரண்டரை லட்சமாக உயர்ந்துவிட்டது என வல்லுநர்கள் கூறுகின்றனர்






## A1 Telecard


சிறிலங்கா **Telecom** உடன்
நேரடி இணைப்பு
**மிகவும் தெளிவான துரிதமான இணைப்பு**

**Transworld Telecard**
10 DM, 25 DM, 50 DM,
**பெறுமதியான தொலைபேசி அட்டைகள**

Australia 20 pf
Canada 15 pf
Germany 15 pf
Germany Mob- 40 pf
U.K. 15 pf
U.S.A. 15 pf

10 DM, 20 DM, 30 DM, 50 DM
**பெறுமதியான தொலைபேசி அட்டைகள்**
**மிகக்குறைந்த கட்டணம்**

தமிழீழம் 4,50 pf
Germany 10 pf
Germany Mob- 40 pf
India 80 pf
Malaysia 40 pf
Singapore 35 pf
SriLanka 65 pf
U.K. 15 pf







தொடர்புகளுக்கு: 0171 416 5064
Internet: www.a1transworld.com


# வாசகர் உலகம்

ஆசிரியருக்கு,

தங்கள் ஆனி இதழ் என் நண்பர் ஒருவர் மூலம் கிடைக்கப்பெற்றேன். அதில் உள்ள சகல விடயங்களுமே மிகச்சிறப்பாக அமைந்துள்ளன. புலம்பெயர்ந்த நாடுகளில் இப்படியான சிறப்பான சஞ்சிகையை வெளியிடுவது மிகவும் சிரமமான காரியம். இவற்றையெல்லாம் கடந்து தங்கள் இளைஞன் கடந்த 7 ஆண்டுகளாக வெளிவருவதையிட்டு தங்கள் குழுவினரைப்பாராட்டுகிறேன்.
கணனி கற்போமா? கல்விநெறி எல்லோரையும் கவரும் என்பதில் சந்தேகம் இல்லை. அத்துடன் "களத்தில் மலர்ந்த கலைஞர்கள்" அசத்தும் இலக்கங்கள், ஐடியா ஐயாசாமி, தமிழனா தமிங்கிலனா? போன்ற தொடர்களும் பிரமாதமாக இருக்கின்றன.
உயிரைப்பிழியும் உண்மைகள்- உண்மையிலேயே அதைப்படிக்கும் போது எம்மையும் அறியாமலே துக்கம் தொண்டையை அடைக்கிறது.

இளைஞன் - வாசகன், இ.நடராஜா- பொன்.

## மீண்டும் சூடு பிடிக்கிறான் "இளைஞன்"

ஆசிரியருக்கு,

இளைஞனில் வரும் ஆக்கங்கள் யாவும் அருமை, பெருமை! அர்த்தம் உள்ள தமிழ் தரும் புலவர் யாருங்க?
தமிழ் ஈழம் அது தனி ஈழம்! திரு.நா. இளங்கோவனின் கட்டுரை மிக அருமை!
மற்றும், உயிரைப்பிழியும் உண்மைகள், ஐடியா ஐயாசாமி, கணனிக்கட்டுரைகள், கவிதைகள் உலகம், போன்ற பகுதிகளும் அருமையாக இருந்தது.
அத்தோடு கேள்வி-பதில் பகுதி வெளிவருவது நல்லது.

-ராஜா சிவகுமார், ஜேர்மனி-

இந்த இதழில் இருந்து கேள்வி பதில் பகுதி ஆரம்பமாகிறது. ஆரம்பித்து வைத்தது போலவே ஜனரஞ்சகமான கேள்விகளையும் அனுப்பி வைச்சுடுங்க.... (ஆ-ர்-)

ஆசிரியருக்கு,

தங்கள் இதழை இலவசமாக டோட்முண்ட் நகரத்தில் பெற்றுக்கொண்டேன். நான் எதிர்பார்த்ததைவிட இளைஞன் கம்பீரமாகவே இருக்கிறான். மீண்டும் இளைஞன் சூடு பிடிக்கிறான் என நினைக்கிறேன். தொடர்ந்து சிறப்பாக வெளிவர எனது வாழ்த்துக்கள்.

சிறி- டோட்முண்ட்

(வாசகர்களிடமிருந்து நீண்ட கடிதங்கள் நிறையவே வந்துகொண்டிருக்கின்றன. அவற்றைச் சுருக்கியே இங்கு தந்திருக்கிறோம்.)

## அமெரிக்காவில் இன்டர்நெட் மூலம் மகனை விற்ற தாய்

அமெரிக்கா கலிபோர்னியாவை சேர்ந்தவர் ஹெலன்சேஸ். 29 வயது இளம் தாய். இவர் தனது 10 வயது மகனை இன்டர் நெட் மூலம் விற்றார். குழந்தைவேண்டும் என்று இன்டர்நெட்டில் கேட்டு இருந்த ஒரு தம்பதிக்கு தனது மகனை விற்று இருந்தார். பெற்ற மகனை கொஞ்சம்கூட சம்பந்தம் இல்லாதவர்களிடம் விற்று விட்டு வேறு நகருக்கு ஹெலன் குடிபெயர்ந்து விட்டார்.
இதுபற்றி கலிபோர்னியா போலீஸ் புலனாய்வுதுறை துப்பு துலக்கியது.
மகனை விற்ற ஹெலனை கைது செய்தது. ஹெலன், 10 வயது மகன் இருப்பதால் தன்னால் சுதந்திரமாக இருக்க முடியவில்லை. பள்ளியிலும் அவன் நிறைய சேட்டை செய்கிறான். அதனால்தான் விற்றேன் என்றார். இதையடுத்து ஹெலன் மீது போலீஸ் நடவடிக்கை எடுத்து உள்ளது.

# முகத்தைவரையும் தமிழரும் முகத்தையிழக்கும் தமிழரும்

(கடந்த இதழ் தொடர்ச்சி...)

**வரலாறு** எத்தனையோ விடுதலைத் தலைவர்களையும், அவர்வழிநடந்த சுதந்திர தீபங்களையும் கண்டிருக்கின்றது. ஆனால் இந்த வரலாறு இதுவரைகாணாத தன்னையே விடுதலை வித்தாக மண்ணில் விதைக்கும் புலிகளைக்கண்ட பின் புறநானூறு தமிழரின் இலக்கியமல்ல நடந்ததாகத்தான் இருக்கும் என என் மனம் ஏற்றுக்கொள்கிறது. ஆயிரம் தடைகள் போடப்படினும் அத்தனையும் உடைத்தெரியப்பட்டு ஈழம் மீட்கப்படும் காலம் வெகுதூரத்தில் இல்லை. 1619 யூன் 5ல் வண்ணார்பண்ணைப்போரில் போத்துக்கீசியனைத் தன் வலிமையால் நிலைகுலையச்செய்தான் சங்கிலி மன்னன் என்றாலும், சங்கிலியனுடன் சேருவதாய் நாடகமாடி காட்டிக்கொடுத்தான் காக்கைவன்னியன் என்ற இனத்துரோகி. இதனால் வீழ்ந்தான் சங்கிலி மன்னன். இழந்தோம் தமிழிழநாட்டை. சோழப்பேரசின் வீழ்ச்சிக்குப்பின்பும் பேரரசாக வானோங்கிநின்றதே எமது ஈழவரசு. ஒருவுண்மையென்னவெனில் சங்கிலியனை போத்துக்கேசன் காக்கைவன்னியனின் துரோகத்தால் வீழ்த்திட முடிந்தாலும் அந்த மாமன்னனின் வீரவாளைக் கைப்பற்ற முடியவில்லை. இன்னும் அவ்வீரவாள் நல்லூர் வீரகாளி அம்மன் ஆலயத்துள் உண்டு. நாளை ஈழம் மீட்கப்பட்டபின் தமிழீழ மக்களாட்சி அவையில் இவ்வீரவாளை பிரகாரன் கரத்தால் வைக்கப்பட வேண்டும். இது என் தணியாத ஆசை!

வரையப்படுகிறது தமிழனுகக்கொரு முகம்! நறுமணத்தோட்டத்தில் நாம் நின்றாலும் முகர்ந்திட நாசியிழந்திருந்தோம். அழகு ஓவியம் இருந்தாலும் பார்த்திடக்கண்களை இழந்திருந்தோம். தேமதுரத்தமிழிசை இருந்தும் வாயை இழந்திருந்தோம். சிங்காரத் தமிழிருந்தும் கேட்டிட காதுகளை இழந்திருந்தோம். இது நேற்றுவரை! நாளை முகம் பெறுவோம். நறுமணத்தை முகரந்திட நாசியும், ஓவியத்தைப் பார்த்திட கண்களையும், தமிழிசை பாடிட திருவாயையும், சிங்காரத் தமிழைக்கேட்டிட செவியும் பெறுவோம்.

ஆம்! புலிப்பாலெடுத்து தியாகம் என்ற தூரிகையால் தீட்டப்படுகிறது தமிழனுக்கென்றொரு முகம் அங்கே!

ஆனால், ஈழத்தின் போர்ச்சூழலில் நாட்டைவிட்டு அகதியாகிவாழும் தமிழனே உன் நிலையென்ன? அகதியென்ற சொல்லை மட்டும் நாகரீகப்படுத்தி புலம்பெயர்ந்தவர்கள் என அழைக்க மட்டும் விரும்புகிறாயே ஒழிய நாளைய




ஈழத்தின் வளத்துக்கும் வாழ்வுக்கும் உன் பங்களிப்பென்ன? உன் எதிர்காலத் தலைமுறையின் நாளை எப்படி அமையப்போகிறது. சிந்தித்தாயா?

ஐரோப்பாவில் குறிப்பாக செர்மனியில் யூத இனம் கண்ட இனஅழிப்பை நீ அறியவில்லையா? அவ்ரகள் கண்ட அத்துணைக்கொடுமைகளும் அவர்களுக்கு தாயகக்கோட்பாட்டை தாரக மந்திரமாக்கின! அன்று அவர்கள் அயல்நாடுகளில் வேண்டாதவர்களாக அலைந்த காலங்களில் தாம் ஒன்றாகக்கூடிப்பிரியும் எந்த விழாவாகட்டும் பிரியும்போது, எமது அடுத்த சந்திப்பு எம் சொந்தநாட்டில் அமையட்டும். எனக்கூறியே பிரிவர். இதன் மூலம் தம் உணர்வை எப்போதும் புதுப்பித்துக்கொண்டனர். இந்த உணர்வே இன்று அவர்களையொரு தனி நாட்டினமாக வைத்திருக்கின்றது. ஆனால், இதேகாலகட்டத்தில் 14 ம் 15 ம் நூற்றாண்டுகள் இந்தியாவிலிருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு ஹய்பர்கணவாயூடாக இடம் பெயர்ந்த நரிக்குறவர் என எம்மால் பேச்சுத்தமிழில் அழைக்கப்படும் ஜிப்சி (Gypsies) என்ற இனத்தினர் எந்த குறிக்கோளுமின்றி தம்மை ஒரு தேசிய இனமாக அடையாளங் காட்டத்தவறியதுடன் ஏனோதானோவென்றே வாழ்ந்தனர். இதனால் . இந்த ஜிப்சிகள் யூதஇனத்தைவிட மிகக்கொடுமையான இனவழிப்புக்கு முகம் கொடுத்தது பலருக்கு தெரியாது. இந்த ஜிப்சிகள் செர்மனி, ருமேனியா, போலந்து போன்ற

**•வண்ணை ஆனந்தன்•**

நாடுகளில் இன்றும் படுகோரமான இன ஒழிப்புக்கொடுமைக்கு முகங்கொடுத்து நிற்பதுடன் 2 ம் உலக யுத்தக்காலத்தில் யூதர்களுக்கு இணையாக ஏறக்குறைய 5 லட்சம் மக்கள் நாசிகளால் அழிக்கப்பட்டனர். இதில் திடுக்கிடும் தகவலென்னவென்றால் பல லட்சம் ஜிப்சிகள் மலடாக்கப்பட்டதே! யூதர்களைப்போல் எலிக்கும் வாழ ஒரு குகையுண்டு எமக்கும் வாழ ஒரு நாடு வேண்டும் என இன்றும் இந்த ஜிப்சிகள் எண்ணவில்லை. நாளை இந்த இனம் முற்றாகவே அழிந்துவிடப்படக்கூடும்! இந்த நிலையில் உயர்ந்த செய்மொழியையும் சிறந்த நாகரீகத்தையும் கொண்ட தமிழா நீ ஜிப்சியாகத்தான் போகிறாயா? சைபீரியாவில் வாழும் நாரைகள் அங்கு ஏற்படும் பனியுறையும் குளிர்காலத்தில் அன்றாட வாழ்வியலுக்கு இடையூறு ஏற்பட புலம்பெயரந்து 10,000 மைல்கள் பறந்து நமது மன்னாருக்கு பள்ளிமுனைப்பகுதிக்கு வருகின்றன. இக்காலகட்டத்தில் வாழ்வியலையும் நடத்திக்கூடுகட்டி குஞ்சு பொரித்தும் வாழ்கின்றன. காலநிலை சீரானதும் ஒரு நிமிடங்கூடத்தாமதியாமல் மீண்டும் சைபீரியாவுக்கு பறந்து சென்றுவிடுகின்றன. மன்னாரிலே நிரந்தரமாகத் தங்கிவிடுவதுமில்லை, குடியுரிமைபெறுவதுமில்லை. தம் தாய் மண்ணை மறப்பதுமில்லை. மன்னார் பறவையினத்துடன் திருமணம் செய்து அங்கேயே தரித்துவிடுவதுமில்லை.

நம்மில் சிலர் புலம்பெயரந்த மண்ணிலே தங்கிவிட எண்ணும் ஒருநிலை துளிர்ப்பதைக் காணக்கூடியதாய் இருக்கிறது. எனவேதான் ஈழத்தில் என்றோ முகமிழந்த தமிழன் தன் எதிர்காலத்தலைமுறையை புலம்பெயர்ந்த மண்ணில் முகமிழக்க வைத்துக்கொண்டிருக்கிறான் என்கிறேன்.
யூதனைப்போல் குறிக்கோளுடன் நம் வாழ்வா? அல்லது ஜிப்சிகள் போல் குறிக்கோளற்றது நம் வாழ்வா? ஒருவேளை, சைபீரிய நாரைகள் எம்மை விட உயர்ந்தனவா!
ஈழத்தில் முகம் வரைகிறான் தமிழன். இங்கு முகம் இழக்கிறான் தமிழன்.

## கடந்த ஆயிரம் ஆண்டுகளில் ஜூலை-27 இல் நடந்த முக்கிய சம்பவங்கள்

(கடந்த ஆயிரம் ஆண்டுகளில் ஜூலை-27 நடந்த முக்கிய சம்பவங்கள் இங்கே தொகுத்து தரப்படுகின்றன.)

**1540**- ம் ஆண்டு இங்கிலாந்து மன்னர் 8-வது ஹென்றியின் முக்கிய ஆலோசகர் தாமஸ் கிராம் வெல் தேசத்துரோக குற்றச்சாட்டுக்காக தூக்கிலிடப்பட்டார்.

**1789:** அமெரிக்காவில் வெளி நாட்டு இலாகா அமைக்கப் பட்டது.

**1824:** பிரான்ஸ் நாவலாசிரியர் அலக்சாண்டர் டூமாஸ் ஜூனியர் பிறந்த நாள். இவர் 'திரீ மஸ்கட்டியர்ஸ்' நாவலை எழுதிய அலக்சாண்டர் டூமாவின் மகன்.

**1866:** இங்கிலாந்துக்கும், அமெரிக்காவுக்கும் தந்தி தகவல் தொடர்புக்காக அட்லாண் டிக் சமுத்திரத்தில் கடலுக்கு அடியில் கேபிள் போடப்பட்டது.

**1921:** சர்க்கரை நோய் சிகிச்சைக்காக கனடாவைச் சேர்ந்த பிரடரிக் பான் டிங்கும், சார்லஸ் பெஸ்டும், இன்சுலினை தனியாக பிரித்து வெற்றி கண்டார்கள்.

**1953:** கொரியாவில் 3 ஆண்டு களாக நடந்த போரை முடிவுக்கு கொண்டு வரும் வகையில் பன்முன் ஜாமில் ஒப்பந்தம் கையெழுத்தாகியது. இந்தப் போரில் வட கொரியா சீனாவைச் சேர்ந்த 16 லட்சம் சிப்பாய்களும், ஐ.நா. சபையை சேர்ந்த 1 லட்சத்து 18 ஆயிரம் சிப்பாய்களும் உயிர் இழந்தார்கள்.

**1970:** போர்ச்சுக்கல் சர்வாதிகாரி சலாசர் மரணம் அடைந்தார். இவரது முழுப்பெயர் அண்டோனியோ ஒலிசியரா சலாசர். 1932-ம் ஆண்டு பிரதமரான அவர் 1968-ம் ஆண்டு மாரடைப்பு ஏற்படும் வரை ஆட்சி செய்து வந்தார்.

**1976:** உகாண்டாவுடன் தூதரக உறவை இங்கிலாந்து முறித்துக் கொண்டது.

**1980:** ஈரான் நாட்டில் பதவி நீக்கம் செய்யப்பட்ட மன்னர் முக மது ரீசாய

தொடர்ச்சி 14 ம் பக்கம்.

## உங்களுக்குத் தெரியுமா?

*ஐரோப்பிய வாழ்வில் இயந்திரங்கள் போல ஓயாது உழைத்துக்கொண்டிருக்கிறோமே. இயந்திரம் போல உடலுள் இயங்கும் பல விசித்திரமான செயங்பாடுகள் எம்மை ஆச்சரியப்படவைக்கும். இதோ ஒரு சில நிகழ்வுகள்:*

*மனிதன் தனது 60 வது வயதில் 50 வீதமான சுவை உணர்வையும், 40 சதவீதமான வாசனை உணர்வையும் இழந்து விடுகிறான். வயோதிபத்தில் பறிபோகும் செயற்பாடுகள் இவை!*

*நமது இரைப்பையில் சுரக்கும் ஹைட்ரோகுளோரிக் அமிலம் இரும்பைக் கூடக் கரைக்கும் தன்மை கொண்டது. ஆனால் இதைத் தனக்குள் வைத்திருக்கும் இரைப்பைக்கு எந்தச் சேதமும் இல்லை. வினோதமாக இல்லையா?*


*ஒரு சதுர இங்குல மனிதத் தோலில், 19 மில்லியன் கலங்கள், 90 எண்ணெய்ச் சுரப்பிகள், 19 ஆயிரம் உணர்ச்சிக்கலங்கள், 19 அடி இரத்தக்குழாய்கள் உள்ளன. தலையைச் சுற்ற வைக்கும் நிஜங்கள் இவை.*

*மனித ஈரலில் 80 வீதம் வெட்டப்பட்டாலும், மீதியுள்ளது எல்லாப் பணிகளையும் திறம்படச் செய்யும் வல்லமை படைத்தது. வெட்டப்பட்ட ஈரல் முழுவளர்ச்சி அடைந்து விடும் தன்மையும் கொண்டது.*

*எமது உடலில் மொத்தமாக 206 எலும்புகள் உள்ளன என்பது உங்களில் பலருக்குத் தெரிந்திருக்கும். ஆனால், இந்த எலும்புகள் எங்கே உள்ளனவென்று தெரியுமா?*
*அச்சு எலும்புகள் முதுகெலும்புத்தொடர் 26 தலை எலும்புகள் 29, விலா எலும்புகள் 25 சேர்க்கை எலும்புகள் கை எலும்புகள் 64 கால் எலும்புகள் 62.*

*-ஏ.ஜே.ஜீ-*

# விளக்கம் தேவையில்லாத படங்கள்



புதிய தமிழ் அறிவியல் கலைச்சொற்கள்
**மின்னணுவியல் சொற்கள்**

PAGER அகவி
MEDIA ஊடகம்
COMMUNICATION தெரிவிப்பியல்
CELLULAR PHONE நடைபேசி
FAX தொலைநகல்

தமிழ்நாட்டின் பெருமை மிக்க வரலாற்றில் பச்சையப்பன் கல்லூரியின் இடம் தனி.

வழிவழியாய்ப் பச்சையப்பன் கல்லூரி பற்றி வழங்கிவரும் ஒரு வாய்மொழி உண்டு.

'பச்சையப்பன் கல்லூரிப் படிக்கட்டும் பைந்தமிழ் பேசும்'

படிக்கட்டுக் கூட பைந்தமிழ் பேசும் மண்ணாய் இருந்த தமிழ்நாடு இன்று ஆங்கிலத்தின் அடிபட்டுப் பாழ்பட்டுக் கிடக்கிறது.

திருச்சி பாரத மிகுமின் நிலையக் குடியிருப்பில - ஏன் இன்னும் பல இடங்களில் - தெருவில் குப்பைத் தொட்டிகள் வைத்திருக்கிறார்கள்.

**எங்கிருந்தோ வந்த ஆங்கில மொழியில் ஒவ்வொரு குப்பைத் தொட்டியிலும் 'Use Me' என்று** எழுதப்பட்டிருக்கிறது.

**தமிழ்நாட்டில் குப்பைத் தொட்டி கூட இன்று ஆங்கிலம் பேசும் தலைகுனிவை யாரிடம் சொல்லி அழுவது?**

o

**காய்ச்சல் என்று சொல் 'ஜுரம்' என்று சொல்லாதே - எலும்புருக்கி என்று சொல் 'சயரோகம்' என்று சொல்லாதே' எனத் தமிழறிவூட்டி** மறைமலையடிகள் முதல் பாவேந்தர், பாவாணர், பெருஞ்சித்திரனார் வரை உணர்ச்சியற்ற தமிழ் மாடுகளுக்கு முறையான மேய்ச்சல் பழக்கினார்கள்.

இன்று -

தமிழ்நாட்டில் ஒருவகைக் கண் நோயை 'மெட்ராஸ் ஐ' என்கிறான். **'Madras Eye'** என்கிறானே - இவனுக்கு ஏன் **'London Tongue'** என்பதுதான் புரியவில்லை.

**நோயைக்கூடத் தமிழில் சொல்ல முடியாத நோய் தமிழனை அழித்துக் கொண்டிருக்கிறது.**

o

தமிழர் தலைவர் ஆதித்தனார் உள்ளம் குமுறி - விம்மி வெதும்பி - தமிழனை எண்ணி அடிக்கடி சொல்வார்:

> **'நான்கு தடவை உலகத்தைச் சுற்றியிருக்கிறேன் - தமிழ்நாட்டில் உள்ளதைப்போல் K.S.கண்ணன், P.V.முத்து என்று இரண்டு மொழிகளில் கையெழுத்துப் போடுகிறவன் உலகில் எந்த நாட்டிலும் இல்லை'.**

o

'திருமிகு' என்று பெயருக்கு முன்னால் போடுவதால் தமிழன் பொருள் சேர்ப்பதிலேயே கண்ணும் கருத்துமாய் இருக்கிறான் - மொழி இன நாட்டுணர்வுகள் எதுவுமே அற்ற முண்டமாய் வாழ்கிறான். - 'மானமிகு' என்று பெயருக்கு முன்னால் எழுதினாலாவது தமிழனுக்கு மானம் வருகிறதா பார்க்கலாம் என நினைத்த தமிழுணர்வாளர் சிலர் 'மானமிகு இரா வள்ளுவன்' 'மானமிகு செ.தமிழரசன்' என்று எழுதும் முறையைக் கொண்டு வந்தார்கள்.

இப்போது தமிழன் பெயர்களை எப்படி எழுதுகிறான் தெரியுமா?

# தமிழனா



-காசி ஆனந்தன்-

6

# தமிங்கிலனா?



**நேர்வு**

**தமிழனால்**
**தமிழும் தமிழனும்**
**அழிந்து கொண்டிருக்கும்**
**நிகழ் வாழ்வு**
**-ஒரு வரைபடம்**

'மானமிகு P.S.கதிரவன்', 'மானமிகு N.M.முத்தையா'.

அட... 'மானமிகு' எனும் சொல்லுக்குப் பக்கத்தில் P.S., N.M. என எழுதிய போதே இவன் மானம் போயிற்றே...

தமிழனா இவன்?

o

ஆங்கிலத்துக்குத் தமிழன் முழு அடிமையாகிவிட்டான்.

தன் பெயரின் ஆங்கில முதல் எழுத்துப் பொறித்த தங்கக் கணையாழியை விரலில் அணிகிறான்.

கழுத்தில் தங்க மாலையில் தன் முழுப் பெயரையும் ஆங்கில எழுத்துக்களாய்க் கட்டித் தொங்கவிடுகிறான்.

ஆங்கிலத்தில் 'Sweet Heart' என்றும் 'Love is Blind' என்றும் - இன்னும் எப்படியெல்லாமோ அச்சிடப்பட்ட மேலாடைகளை 'T. Shirts' என்ற பெயரில் அணிந்து உலா வருகிறான்.

மணவிழாக்களில் 'Welcome' என்று ஆங்கிலத்தில் தோரண வளைவுகட்டி மகிழ்கிறான்.

வாசலில் - வீட்டுக்கதவில் 'In - Out' எழுதி வைக்கிறான்.

முன்னோர் தமிழில் தாலாட்டுப்பாடி வளர்த்த தமிழ்க் குழந்தைக்கு 'Birthday Party' வைத்து 'ஹாப்பி பர்த்டே டு யூ' பாடி முளையிலேயே தமிழினத்தைச் சாகடிக்கிறான்.

தமிங்கிலனாகிக் கொண்டிருக்கும் தமிழன் இவன்.

○

தமிழ்நாட்டிலுள்ள மார்வாடியும் குசராத்தியும் தங்கள் வணிக நிலையங்களின் கணக்குப் பதிவேடுகளை மார்வாடி மொழியிலும் குசராத்தி மொழியிலுமே எழுதி வருகிறார்கள். - தமிழ்நாட்டிலுள்ள தமிழனோ ஆங்கிலத்தில் தன் கடைக் கணக்குகளைப் பதிவு செய்கிறான். தமிழுணர்வு மிக்க நாட்டுக் கோட்டையரை மட்டும் விதிவிலக்காகக் கொள்ளலாம்.

○

செந்தமிழாய்வில் முனைவர் பட்டம் பெற்ற தமிழறிஞர் பலர்கூட தங்கள் பெயர்களுக்கு முன்னால் 'முனைவர்' என எழுதுவதைத் தாழ்வெனக் கருதி 'டாக்டர்' எனப் போட்டுச் செருக்குறும் இழிந்த தமிழ் மண் இது.

தமிழ் மண்ணில் சில மாநகர்களின் பெயர்களை ஆங்கிலம் கொண்டே தமிழன் அழைக்கிறான்.

தமிழ்நாட்டில் சென்னையை 'மெட்ராஸ்' என்றும் திருச்சியை 'ட்றிச்சி' என்றும் தஞ்சையை 'டஞ்சூர்' என்றும் அழைக்கும் தமிழன் தமிழீழத்தில் யாழ்ப்பாணத்தை 'யாப்னா' என்றும் திருக்கோணமலையை 'ட்றிங்கோ' என்றும் மட்டக்களப்பை 'பட்டிக்கலோ' என்றும் அழைப்பதில் தனிப்பெருமை கொள்கிறான்.

இன்றைக்கும் தமிழ்நாட்டின் தலைநகராம் சென்னையில் தமிழர் பெரிதுகூடும் கடைத் தெருக்கள் 'சைனா பசாரும்' 'பர்மா பசாரும்' 'பாண்டி பசாரும்' 'லஸ் கார்னரும்' தானே - இல்லையா?

'மவுண்ட் ரோடு' என்பதை 'அண்ணா சாலை' எனத் தனித்தமிழில் மாற்றம் செய்தோமே தவிர தனித்தமிழ்ச் சாலையாக அதை மாற்றினோமா? எத்தனை ஆயிரம் ஆங்கிலப் பெயர்ப் பலகைகள் அச்சாலையின் இரு மருங்கிலும் நிரைபட நின்று தமிழில் மண்போட்டுச் சிரிக்கின்றன.

தமிழர் நகரங்கள் தோறும் அரசு நிறுவனங்கள் - வணிக நிலையங்கள் ஆகியவற்றின் பெயர்ப் பலகைகள் - விளம்பரங்கள் அனைத்தும் ஆங்கிலமாய்க் காட்சி தருவதால் - குட்டி இங்கிலாந்தாகவே தமிழ்நாடு ஆகிவிட்டதால் - தமிழன் தன் முகவரியை முற்றுமுழுதாய்த் தொலைத்துவிட்டான் என்றே சொல்லத் தோன்றுகிறது.

○

கடைகளின் பெயர்களை 'எண் கணியம் (Numerology) பார்ப்பவனே கணித்து முடிவு செய்கிறான்.
எண் கணியம் ஆங்கில எழுத்துக்களைக் கொண்டே கணிக்கப்படுகின்றது.

'இளங்கோ உணவகம்' என்னும் பெயரில் - 'இளங்கோ'வில் வரும் 'இ'க்கு 'E' போடாமல் 'I' போட்டால்தான் எண்கள் பொருந்திவரும் - வணிகம் வெற்றிபெறும் என்று கூறி இளங்கோ உணவகத்தை 'Ilango Hotel' ஆக்கி உணவகத்தில் ஆங்கிலப் பெயர்ப்பலகையை இருத்தி விடுகிறான் எண் கணியன்.

தமிழனின் அறியாமையும் மூடத்தனமும் தமிழை அடித்து நொறுக்கித் தகர்த்திடும் கொடுமை அன்றோ இது?

சின்னஞ்சிறு உணவகத்துக்கும் - முடிதிருத்தகத்துக்கும் - பழக்கடைக்கும் பெயர் சூட்ட இன்று எண் கணியம் பார்த்து ஆங்கிலத்தில் பெயர் வைக்கிறானே தமிழன் - பண்டைக்காலத்தில் பூம்புகாரில் கொற்கையில் தொண்டியில் உலக வணிகம் நடத்தியபோது - உரோமாபுரிக்கும் கிரேக்கத்துக்கும் முத்தும் பவளமும் ஏற்றிச் சென்ற போது எந்த எண்கணியனைக் கொண்டு தன் நாளங்காடிக்கும் அல்லங்காடிக்கும் இவன் பெயர் கணித்தான்?

ஆங்கிலப் பெயர்ப்பலகையா சிலப்பதிகார காலத்தில் பூம்புகார் அங்காடியில் தொங்கியது?

○

எழுத்தாளரும் பாவலரும் செய்தி ஏடு நடத்துநரும் ஒருபுறம் தமிழை ஏறி மிதித்துக் கூத்தாடுகிறார்கள்.

தமிழை எழுதிப் பிழைக்கும் எழுத்தாளர்களே தமிழை அழிக்கும் கொடுமையை என்னென்பது?

சோறு போடும் தமிழுக்கு நஞ்சுபோடும் எழுத்தாளர்கள்.

பாலகுமாரன் எழுதியுள்ள 'தொப்புள் கொடி' என்னும் நூலின் ஒரு பகுதி இது:

> "நாங்க 'காபி சாப்பிடறதில்ல'
>
> 'ஹாட் டிரிங்ஸ்தானா?'
>
> 'அது ராத்திரி'
>
> 'பகல்ல....?'
>
> 'தூத் பால்' சிரித்தான். 'இப்பதான் சாப்பிட்டோம்' என்றான்'.
>
> 'பையனுக்கு 'டிரஸ்' எடுக்கணும்'
>
> 'எடுக்கலாம். கோபால்தாஸ் இப்பதான் நிறைய சரக்கு கொணந்தாரு'
>
> 'எங்க இருக்கு?'
>
> 'அவரு ரூம்ல'
>
> 'பசங்க ட்ரஸ் இருக்கா கோபால்தாஸ்'?
>
> 'லேடீஸ் ட்ரஸ்கூட இருக்கு. வான்ட் டு ஸீ?'
>
> 'எங்க ரூம்?'
>
> 'நெக்ஸ் பில்டிங். ஹோட்டல் பாலிமர்'
>
> 'ஹோட்டலா?'
>
> 'நீங்க ஜீன்ஸ் சுடிதார் போடுறதில்லையா?'
>
> 'சுடிதார் போடுவேன்'
>
> 'யு லுக் யெங். ஜீன்ஸ் போடுங்க. பாம்பே'ல ஆல் லேடீஸ் ஒன்லி ஜீன்ஸ் வேரிங்'
> 'வாசல்ல பார்த்தேன். எண்ணூறு ரூபா போட்டுருக்கு'
>
> 'அது கடை ரேட்'
>
> 'உங்ககிட்ட எவ்வளவு டிஸ்கவுண்ட்?'
>
> 'ஹண்ட்ரட் பர்சன்ட்'
>
> 'என்னா?'
>
> 'ஹண்ட்ரட் பர்சன்ட்' சிரித்தான்.
>
> புரிந்தது.
>
> அழைப்பு புரிந்தது. பேசுவதா வேண்டாமா? யோசித்தாள். சிரித்தாள்.

**'கம் லெட்ஸ் கோ' அவன் அவள் தோளில் கை வைத்தான்".**

— பாலகுமாரன்
'தொப்புள் கொடி'

'மாஸ் றைட்டர்' என அழைக்கப்படும் ஆங்கில எழுத்தாளர் அல்ல - தமிழ் எழுத்தாளரான ராஜேஸ்குமார் எழுதி 'சஸ்பென்ஸ்' என்னும் ஆங்கில இதழில் அல்ல தமிழ் இதழில் வெளிவந்துள்ள கன்னிக்கடன் என்னும் கதையில் சில வரிகள்:

**'ரிசீவரை வைத்துவிட்டு மானேஜரின் அறைக்குப் போய் பர்மிஷன் வாங்கிக் கொண்டு வெளியே வந்து ஆட்டோ பிடித்து திருவேங்கடம் ரோட்டில் இருந்த அந்த நர்சிங் ஹோமை தொட்டபோது நேரம் 11.10**

**ஐ.சி. யூனிட்டில் இருந்து அந்த டாக்டர் வெளிப்பட்டார். கேட்டார்:**
**'பேஷண்டோட வந்தவங்க யாரு?'**

**முருகேசன் முன்னால் போனான்.**

**'பேசண்டோட ப்ளட் குரூப் இங்கே யாருக்காவது இருக்கா?'**

**'எனக்கும் என்னோட மதருக்கும் ஒரே ப்ளட் குரூப்தான் டாக்டர். நான் ஒரு தரம் என்னோட மதருக்கு ப்ளட் கொடுத்திருக்கேன்.**

**'தட்ஸ் குட். உள்ளே வாங்க'**

**முருகேசனைக் கூட்டிக் கொண்டு உள்ளே போனார் டாக்டர்.**

— ராஜேஸ்குமார்
'கன்னிக்கடன்'

தொடரும்...


பிராங்பேர்ட்டில் கடுகு முதல் தங்கம் வரை கொள்வனவு செய்ய நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்




தங்க நகைகள், சேலை வகைகள், ரெடிமேட் உடுப்புக்கள், எவர்சில்வர்ப் பொருட்கள், திருமண வாழ்த்து மடல்கள், ஓடியோ - வீடியோ, சீ.டி, வார - மாதப் பத்திரிகைகள், தொலைபேசி அட்டைகள், மரக்கறி, கடலுணவு வகைகள் மற்றும் அனைத்தையும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ள விஜயம் செய்யுங்கள்

**Adavaa Asia Centar**
TAUNUS STR 17, 60329 FRANKFURT,
TEL: 069-25 03 61-2, FAX: 069- 23 40 45


# இளம் ஜோடி விவாகரத்து அதிகரிப்பு

கியூபாவில் தற்போது இளம் தம்பதியினர் இடையே விவாகரத்துக்கள் அதிக ரித்து வருகின்றன. அவர்கள் திருமணம் செய்து கொள்ளாமல் கணவன் மனைவியாக சேர்ந்து வாழ்வதையே பெரிதும் விரும்புகிறார்கள். அதற்கான சட்ட அங்கீகாரம் பெறுவதிலும் அவர்கள் அதிக ஆர்வம் காட்டுகிறார்கள். இத்தகைய அங்கீகாரம் இந்தத் தீவின் கிழக்குப் பகுதியில் வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு இளம் ஜோடியினர் விவாக ரத்தை நாடுவதற்கு காரணம் இங்கு நிலவும் பொரு ளாதார சீர்குலைவுதான் என்று கூறப்படுகிறது. கணவன், மனைவி 2 பேரும் சம்பாதித்தாலும் குடும்பம் நடத்த முடியவில்லையாம். விவாகரத்து செய்து கொண்டாலும் தங்கள் வாழ்க்கையில் அதனால் எந்தவித பாதிப்பும் இல்லை என்று கோமெஸ் என்ற பெண் கூறி உள்ளார்.

# ஏக்கரில் அமையும் மிதக்கும் நிலையம்

வானவெளியில் அமெரிக்கா, ரஷியா, ஜப்பான் மற்றும் ஐரோப்பிய நாடுகள் சேர்ந்து கூட்டாக ஒரு விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தை அமைத்து வருகின்றன. இந்த மிதக்கும் நிலையத்தை அமைக்கும் பணி முடிவடையும் போது அது ஒரு ஏக்கர் பரப்பளவுக்கு விரிந்து இருக்கும். அதன் காபின் அறை ஒரு போயிங் 747 ஜம்போ ஜெட் விமானம் அளவுக்கு இருக்கும். இதில் 7 வீரர்கள் நிரந்தரமாக தங்கி இருந்து ஆராய்ச்சி செய்வார்கள்.
இந்த மிதக்கும் நிலையத்தை அமைக்க ரூ.2 லட்சத்து 70 ஆயிரம் கோடி செலவிடப்படுகிறது. இந்த ஆராய்ச்சி நிலையத்துக்கான கட்டுமான சாமான்கள் விண்கலங்கள் மூலம் அனுப்பி வைக்கப்படுகின்றன. சமீபத்தில் 3 ரஷிய வீரர்களுடன் கட்டுமான பொருட்களை ஏற்றி சென்ற சுவேதா என்ற விண்கலம் மிதக்கும் ஆராய்ச்சி நிலையத்துடன் இணைந்தது. இன்னும் இதுபோன்ற 35 விண்கலங்களில் கட்டுமான பொருட்கள் கொண்டு சென்ற பிறகு 2005-ம் ஆண்டில் மிதக்கும் ஆராய்ச்சி நிலையம் முழு வடிவம் பெறும்.

# வானவெளியில் 1

## 11 ம் பக்கத் தொடர்ச்சி...

பகலவி ஷா புற்று நோய் காரணமாக மரணம் அடைந்தார்.

**1941-ம் ஆண்டு மன்னரான அவர் 1979-ம் ஆண்டு அபியதுல்லா கோமேனி தலைமையில் நடந்த புரட்சியில் நாட்டை விட்டு ஓடிவிட்டார்.**

**1984: ஆலிவுட் நடிகர் ஜேம்ஸ் மேசன் மரணம் அடைந்தார்.**

**1989: சுவீடன் பிரதமர் ஒலப் பால்மேயை 1986-ம் ஆண்டு சுட்டுக் கொன்றதாக கைது செய்யப்பட்ட கிறிஸ்பேட் டர்சனுக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. பின்னர் அவர் நிரபராதி என்று விடுவிக்கப்பட்டார்.**

**1996: அமெரிக்காவில் அட்லாண் டாவில் ஒலிம்பிக் போட்டி நடக்கும்போது அருகில் உள்ள பொழுதுபோக்கு பூங்காவில் குண்டு வெடித்து 2 பேர் பலியானார்கள். 10 பேர் காயம் அடைந்தனர்.**

# கவிதைகள் உலகம்

## இலவு காத்த கிளியாக....

பனியது பெய்யும்
அழகினைக் கண்டு
மனமது துள்ளும்

வெளியினில் சென்றால்
பனியது பெய்யும்
குளிரது அறைய
உடலது நடுங்கும்
உதிரமும் உறையும்

பனியது பெய்யும்
குளிரது அறையும்
பனியது பூவாய்
மரங்களில் தெரியும்
அழகினை ரசிக்க
அவகாசமின்றி
பணமது தேடி
வேலைக்காய் கால்கள்
பனியினில் விரையும்

குளிரிலும்பனியிலும்......
பணமது தேடி......

"இது என்ன வாழ்க்கை"
மனம் தினம் அலுக்கும்

மடியினில் சுமந்த
மகவுடன் குலாவ
மணியின்றி
மனமது துவளும்

வெயிலதன்வரவில்
பனியது ஓடும்
மரமது துளிர்க்க
மனமது மலரும்
மலர்களும் சிரிக்கும்

மாறும் மாறும்
எல்லாம் மாறும்
பணமது தேடும்
நிலையது மாறும்
ஓய்வாய் உட்கார்ந்து
கதைக்க முடியும்
உண்ணும் போதும்
சிரிக்க முடியும்
விரும்பிய மட்டும்
உறங்க முடியும்
குழந்தைகளுடனே
குலாவ முடியும்
குடும்பமாய் கூடிக்
களிக்க முடியும்....
பட்டியல் நீளும்
.....முடியும் முடியும்

எல்லாம் முடியும்

இலவாய் நினைவுகள்
காய்த்துக் குலுங்க
கிளியாய் மனமும்
காத்து நிற்கும்

**சந்திரவதனா. செல்வகுமாரன்**
யேர்மனி

## சுமை...

ஏதோ ஒன்றை
சுமந்து கொண்டுதான்
இங்கே - நம்முடன்
பயணங்கள்
பயணிக்கின்றன.

சுமை
இல்லாத
பயணம்
சும்மா என்றாகிறது

சும்மா-வை
சுமப்பது சுலபமா...
சும்மா
இருப்பவர்களுக்குத்தான்-அது

தெரியும்

தூது செல்லும்
புறாக்களுக்குத்
தெரியாது-அது
சுமக்கும்
வாசகம்

பொதி
சுமப்பவர்களுக்கு
தெரியாது
பொதியில்
பொதிந்திருக்கும்
பொருள்

விரைந்து செல்லும்
ஆற்றுக்கு
தெரியாது
அறுந்து
தொங்கும் வேர்களின்
நிலை....

காக்கையின்
சுமை
குயில்களுக்கு
தெரியாது.

சுமக்கத்
தெரிந்தவர்கள்
சுமக்கிறார்கள்
சாதனைகளை.

சுமக்கத்
துணிந்தவர்கள்
தோல்வியை கூட
சுவைக்கிறார்கள்.

சுமை என்று
ஓடுகிறவனுக்கு
இமை கூட
பின்னால்
சுமையாகும்

சுமைகள்
சுதந்திரத்திற்கான
சூத்திரங்கள்.

பார்த்த மாத்திரத்தில்
கனியை
பறிக்க இயலாது.
சுமக்க
கற்றுக்கொள்!!!!

கவிஞர். கோவி. மோகன்ராஜ்

## இளைஞனே எழு எழு!

இளைஞனே எழு இளைஞனே எழு
இனி இலைதுயர் எழு எழு!
வளைய வந்திடும் துயர்களை வெலும்
வலிமை வந்ததை வெளியிடு

முடியும் என்றுநீ முனைக மலையதன்
முடியும் காலிலே முனை முனை!
நெடிய வாழ்க்கையில் நீயும் ஓங்கிட
நீளும் வெற்றியை நினை நினை!

தோல்வி என்பதும் நிலையிலை அதில்
துவளல் என்பதும் நெறியிலை
கால்கள் முன்செல உள்ள தென்பதால்
கடுகி நீயுமே நட நட!

தடையிலை இனித் தடையிலை அந்தத்
தடைகளை படி ஆகிடும்
விடைகொடு உடன் விடைகொடு உன்றன்
வேதனை எலாம் ஏகிடும்!

சோம்பல் என்பதை விடு விடு புதுச்
சுடர்முகத்துடன் எழு! எழு!
பூம்பொழில் தரும் புதிய மலர் என
புதுமலர்ச்சியில் எழு! எழு!

டாக்டர். **இளங்கம்பன்**, பழனி
நன்றி-ஏழைதாசன்

அரிந்து முடித்ததும்
அழ வைத்தது
வெங்காயம்!

ச.அம்சவேணி-

செருப்பில்லா கால்கள்
செக்கு மாட்டு வாழ்க்கை
கரும்புத் தின்னக் கூலியா?

துல.சேகர்-

# செய்தி துளிகள்



## டயானா மகனுடன் காதல் சரசம் புரிய அழகி ஆசை

இங்கிலாந்து இளவரசி டயானாவின் மூத்த மகன் வில்லியம். இப்போது 18 வயதாகும் வில்லியம் மீது உலகின் பிரபல பெண்களின் காதல் பார்வை விழுகிறது. படத்தில் இருப்பவர் அமெரிக்க பாப் பாடகி பிரிட்னி பியர்ஸ். இவருக்கும் வயது 18. இவர் இளவரசர் வில்லியம் மீது காதல் மோகம் கொண்டு அவருக்கு கடிதம் எழுதி உள்ளார். ஆங்கில கலாசாரத்தில் ஒன்றான காதல் சரச டேட்டிங் செய்து வில்லியமுடன் உல்லாசமாக பொழுதுபோக்க பியர்ஸ் தனது ஆசையை வெளியிட்டு உள்ளார். அவர் வில்லியம் பற்றி சொல்வதை பாருங்கள்.

வில்லியம் ரொம்ப ரொம்ப அழகு. அவர் எனக்கு ஒரு இ-மெயில் அனுப்பினார். என் அழகை வர்ணித்து இருந்தார். நானும் அவரது அழகை வர்ணித்து பதில் அனுப்பினேன். நான் விரைவில் இங்கிலாந்து போவேன். அப்போது வில்லியமோடு டேட்டிங் செய்ய ஆசை. வில்லியமுக்கு என்ன பிடிக்குமோ அதை புரிந்து கொண்டு நான் ஒத்துழைப்பேன். நான் சின்ன குட்டை பாவாடைதான் அணிவேன். அதற்காக எனக்கு பெரிய மனது. திருமணத்துக்கு முன் செக்ஸ் உறவில் ஈடுபடுவதில் உடன்பாடு இல்லை. போதைமருந்து, புகை பிடிப்பது போன்ற கெட்ட பழக்கமும் எனக்கு இல்லை. இப்படி அழகி பியர்ஸ் சொல்கிறார்.

## 55 மைல் வேகத்தில் பாயும் சிறுத்தை புலி: அழியும் அபாயம்

புலிகளில் சிறுத்தைப்புலி ஒருவகை. இது மணிக்கு 55 மைல் வேகத்தில் பாய்ந்து செல்லும். ஒருவினாடிக்கு 70 அடி பாயும். இந்த சிறுத்தை புலிகள் வெட்கசுபாவம் கொண்டவை. காடுகளில் ஆண்சிறுத்தையும், பெண் சிறுத்தையும் தனித் தனியாக இருக்கும். பெண் சிறுத்தையுடன் குட்டிகளும் இருக்கும். காட்டு எலி, பெரிய முயல், மான்களை இந்த சிறுத்தைகள் விரட்டி பிடித்து கொன்று தின்னும். அவற்றை வேட்டையாடிய பிறகு தின்பதற்கு முன் சுமார் 20 முதல் 30 நிமிடம் ஓய்வு எடுத்துக்கொள்ளும் பழக்கம் கொண்டது. ஆப்பிரிக்க காடுகளில் இப்படி சிறுத்தைகள் இறைதேடி வைத்து இருப்பதில் 50 சதவீதத்தை சிங்கம், கழுதைப்புலி, காட்டு நாய், பிணம் தின்னும் கழுகு போன்றவை தின்று வருகின்றன. அங்கு சிறுத்தை இனம் அழியும் அபாயத்தில் உள்ளன. வனங்கள் அழிவு, சிறுத்தைகளின் இறப்பு விகிதம் அதிகரிப்பு, ஆண் சிறுத்தைகள் தங்களுக்குள்ளே சண்டை போட்டுக்கொள்வதால் ஏற்படும் மரணம் மற்றும் தோலுக்காக அவற்றை மனிதர்கள் வேட்டையாடுவதால் அவை அழிந்து வருகின்றன. தற்போது காடுகளில் 9 ஆயிரம் முதல் 12 ஆயிரம் சிறுத்தைகள் அழிந்து இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## மாணவிகள் வண்ண உடை அணியலாம்

ஈரானில் பள்ளி மாணவிகள் முஸ்லிம் மத சம்பிர தாயப்படி கறுப்பு உடை தான் அணிய வேண்டும் என்று கட்டுப்பாடு விதிக்கப்பட்டு இருந்தது. தற்போது அது நீக்கப்பட்டு உள்ளது. புதிய அறிவிப்பின்படி தொடக்கப் பள்ளி மாணவிகள் மெல்லிய நீலம், பச்சை, ஊதா, மஞ்சள் வண்ண உடைகளை அணிய அனுமதிக்கப்பட்டு உள்ளனர். மாணவிகளை உற்சாகப்படுத்தவும் அவர்களிடையே தன்னம்பிக்கையை வளர்ப்பதற்காகவுமே இந்த ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது. எனினும் சில வண்ண உடைகளை அணிவதற்கான தடை இன்னும் நீடிப்பதாக அறிவிக்கப்பட்டு உள்ளது.

## ஆஸ்பத்திரியில் புகைபிடித்தால் தண்டனை

கிரேக்க நாட்டுத் தலைநகர் ஏதென்சில் உள்ள மருத் துவமனைகளில் பணி யாற்றும் டாக்டர்கள், ஊழியர்கள் மற்றும் நோயாளிகள் புகை பிடிப்பதாக அரசுக்கு ஏராளமான புகார்கள் வந்தன. அதையடுத்து நலத்துறை அமைச்சகம் ஒரு உத்தரவு பிறப்பித்தது. அதில், மருத் துவமனைகளில் புகை பிடிப்பவர்கள் உடனடியாக கைது செய்யப்பட்டு கோர்ட்டில் ஆஜர்படுத்தப் படுவார்கள். பிறகு கோர்ட்டு உத்தரவைப் பெற்று சிறையில் அடைக் கப்படுவார்கள் என்று குறிப்பிடப்பட்டு இருந்தது. அதையடுத்து இங்கு உள்ள மருத்துவமனைகளில் போலீசார் அதிரடி சோதனை நடத்தினார்கள். அதை இங்கு உள்ள தொலைக்காட்சி படம் பிடித்துக்காட்டியது.

## செக் நாட்டில் பெருகி வரும் சிறுமிகள் விபசாரம்

செக் நாட்டில் விபசாரத்தில் ஈடுபடுத்தும் சிறுமிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. ஜேர்மனியில் இருந்து எல் லையை நோக்கி தாண்டி செக் நாட்டுக்குள் வரும் வாகன ஓட்டிகளுக்கு இந்த அப்பாவி சிறுமிகள் செக்ஸ் விருந்தாக படைக்கப்படுகிறார்கள். இப்படி செக்சில் ஈடுபடும் வாகன ஓட்டிகளுக்கு கடும் தண்டனை அளிக்கப்படும் என்று ஜெர்மனி எல்லையிலேயே அந்த நாட்டு அதிகாரிகள் துண்டு பிரசுரம் கொடுக்கிறார்கள். அது எந்த பலனையும் தரவில்லை.
செக் நாட்டில் சிறுமிகள் விபசார வழக்கு ஆண்டுதோறும் நூற்றுக்கணக்கில் பதிவு செய்யப்பட்டாலும், உண்மையில் நடப்பவற்றில் இவை ஒரு சிறு எண்ணிக்கைதான். குழந்தை விபசாரத்தை தடுக்க
பள்ளிகளில் பாலியல் கல்வி பாடத்தில் இதையும் சேர்க்கலாமா என்பது பற்றி செக் அரசு பரிசீலித்து வருகிறது.

## எய்ட்ஸ் தடுப்பு மருந்துக்கு அரசு தடுப்பு

நைஜீரியாவில் உள்ள ஒரு விஞ்ஞானி எய்ட்ஸ் நோய் கிருமிகளான எச்.ஐ.வி. பரவாமல் தடுக்க ஒரு புதிய மருந்தை கண்டு பிடித்து உள்ளார். அது தற்போது நிபுணர்களின் ஆய்வுக்காக அனுப்பப்பட்டு உள்ளது. அவர்களின் முடிவு தெரியும் வரை அதை விற்பனை செய்ய அரசு தடை விதித்து உள்ளது. அதை யாரும் தொடர்ந்து பயன்படுத்தக் கூடாது என்றும் அறிவிக்கப்பட்டு உள்ளது. அந்த மருந்தைக் கண்டுபிடித்த அபலாகா என்ற விஞ்ஞானி அதை தனக்குத் தானே ஊசி மூலம் செலுத்தி, அதன் பலனை நிரூபிப்பதாக சவால்விட்டு உள்ளார்.

## குரங்குக்காக கோர்ட்டில் வழக்கு

ஹாங்காங்கைச் சேர்ந்தவர் ஷான் யாட் பியூ (வயது 90). நடைபாதை வாசியான அவர் ஒரு பெண் குரங்கை வளர்த்து வந்தார். அந்தக் குரங்கு அவரது தோளில் உட்கார்ந்து ஊரை வலம் வருவது வழக்கம். இந்த நிலையில், அவர் அனுமதி பெறாமல் அந்த குரங்கை

வைத்திருந்தார் என்று கூறி அதை அரசு அதிகாரிகள் பறிமுதல் செய்து கொண்டு சென்று விட்டனர். அதை மீண்டும் அவரிடம் ஒப்படைக்க வேண்டும் என்று கோரி பொதுமக்கள் கையெழுத்து இயக்கம் நடத்தினார்கள். அதில் 11 ஆயிரம் பேர் கையெழுத்து போட்டிருந்தனர். அதைத் தொடர்ந்து கோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிபதி அந்த குரங்கை அதன் உரிமையாளரிடம் திரும்ப ஒப்படைக்குமாறு அரசுக்கு உத்தரவிட்டார். அதன்படி மீண்டும் அந்த குரங்கு அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

அதனால் மகிழ்ச்சி அடைந்த அந்த முதியவர் அதற்கு வறுத்த கோழிக் கறி, ஐஸ்கிரீம், பீர் ஆகியவற்றைக் கொடுத்து வரவேற்றாராம்.

## டி.வி.யில் நிர்வாணமாக செய்தி வாசிக்கும் பெண்கள்



டி.வி.யில் அரைகுறை ஆடை காட்சிகள் வந்தாலே ஆபாசம் என்று நாம் முகம் சுளிக்கிறோம். ஆனால் டி.வி.யில் பெண்கள் நிர்வாணமாக வந்து செய்தி வாசிக்கிறார்கள். அந்த டி.வி.யை பார்க்க வேண்டும் என்ற ஆசை வருகிறதா? நீங்கள் ரஷியாவுக்குத்தான் செல்ல வேண்டும்.

ரஷியாவில் எம்-1 கமர்சியல் டி.வி.யில் மூடப்படாத உண்மைகள் என்ற நிகழ்ச்சி இரவில் ஒளிபரப்பப்படுகிறது. அப்போது செய்தி வாசிக்கும் பெண்கள், வானிலை செய்தி படிக்கும் இளம் பெண்கள் தங்களது நகைகள், உடைகளை ஒவ்வொன்றாக களைந்துவிட்டு செய்தி வாசிக்கின்றனர். பொதுவாக ரஷியர்கள் பலவீனமான செய்திகளை பார்ப்பதை தவிர்த்து விடுவார்கள். ஆனால் இப்போது இந்த நிர்வாண செய்தி பார்க்க அவசர அவசரமாக டி.வி.யை போடுகின்றனர். இதுபற்றி எம்.-1 டி.வி. இயக்குனர் செர்கி மாஸ்கவின் கூறுகையில், BB இது அநாகரிகமான நிகழ்ச்சி அல்ல. எங்கள் டி.வி.யில் பெண்கள் நிர்வாணமாக வருவதை மக்கள் விரும்பாவிட்டால் அதை நிறுத்திவிட்டு, வேறு சேனலில் செய்தி கேட்டுக்கொள்ளலாம் என்றார்.

## போதை பொருள் அடைத்த ஆணுறை விழுங்கிய ஆசாமி சாவு

போதை பொருட்களை உடலில் எங்கெல்லாமோ வைத்து கடத்து கிறார்கள். அமெரிக்காவில் ஒரு ஆசாமி வித்தியாசமான முறை யில் போதை பொருளை கடத்தி உயிரையே கொடுத்து விட்டான். அந்த ஆசாமியின் பெயரை போலீசார் வெளியிடவில்லை. அவன் 11/2 பவுண்டு எடையுள்ள ஹெராயின் என்ற போதை பொருளை 80 ஆணுறைகளில் அடைத்து விழுங்கி இருக்கிறான். அமெரிக்காவின் மியாமி நகருக்கு வந்தபோது அதில் ஒரு ஆணுறை வெடித்து ஹெராயின் வெளியே வந்து விட்டது. இதனால் நெஞ்சுவலியும் வயிற்று வலியும் ஏற்பட்டு மியாமி நகர மருத்துவமனைக்கு சென்று இருக்கிறான். அவனை எக்ஸ்ரே எடுத்து பார்த்த டாக்டர்கள் அவன் வயிற்றுக்குள் ஆணுறைகள் இருப்பதை கண்டுபிடித்தனர்.


உடனடியாக அவனுக்கு ஆபரேஷன் செய்து அவற்றை வெளியே எடுத்தனர். அவற்றின் மதிப்பு ரூ. 25 லட்சம் ஆகும்.

ஆபரேஷனுக்கு பிறகு குணம் அடைந்த அவன் அடுத்த 2-வது நாள் இறந்து விட்டான். உயிர் போகும் முன் வாக்குமூலம் அளித்த அவன் தான் கொலம்பியா நாட்டை சேர்ந்தவன் என்றும், பணத்துக்கு ஆசைப்பட்டு ஒரு கும்பலுக்காக அதை கடத்தியதாகவும் கூறி இருக்கிறான்.

கடத்தல் கும்பல்காரர்கள் அப்பாவிகளுக்கு பண ஆசை காட்டி அல்லது அவர்களது குடும்பத்தை பணய கைதியாக பிடித்து வைத்து மிரட்டி போதை பொருள் கடத்தல் செயல்களில் ஈடுபடுகிறார்கள்.

தென்றலுக்கு வாசம்
வழங்குகின்றன
பூக்கள்!

அ.கந்ததாசன்-

**உங்கள் ஜாதகக் குறிப்புகள் கைவசம் இல்லையா? கவலையை விடுங்கள்**

**கம்பியூட்டரின் உதவியுடன் நாங்கள் அவற்றைக் கணித்துத் தருகிறோம். உங்கள் பிறந்த திகதி, பிறந்த நேரம் பிறந்த இடம் இவை மட்டும் இருந்தால் போதுமானது உங்கள் குழந்தைகளின் ஜாதகக்குறிப்புகள், ஜாதகபலன்களை கணித்துக் கொள்வதற்கு நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:**

**PEGA STAR-Co Verleger**
**Mr. Antonippillai Thevaraj**
**Hasenberg str.47**
**70176 Stuttgart - Germany**
**Tel: (0049)+711-6157028 Fax: 0049+711-6157030**
**E-Mail: Theva@t-online.de**

**ஜாதகக்குறிப்பு + ஜாதகப்பலன்கள் (15 பக்கங்கள்) கணித்துத் தருவதற்கு தபால்செலவு உட்பட** 56 DM/ 50 SwissFR/ 30 Ca$ **மட்டுமே!**

**படிவத்தை நிரப்பி அனுப்பவும்**

Fullname..............................

Date of Birth............................... Time of Birth...............................
Place of Birth...............................
Address...............................
City/Date...............................

Signature

Bank: Deutsche Bank Stuttgart Konto Nr: 962056800 BLZ 60070024
Name: Antonippillai Thevaraj

### மெஞ்ஞானம் - விஞ்ஞானம் எது சிறந்தது?

-ராஜா சிவகுமார், ஜெர்மனி-

புகழ்பெற்ற விஞ்ஞானியான கெப்லருக்கு மனைவி சரியாக வாய்க்கவில்லை. அவளை விவாகரத்து செய்துவிட்டார்.



இரண்டாவது மனைவியை விஞ்ஞான முறையில் அறிவு பூர்வமாகத் தேர்ந்தெடுப்பது என்று தீர்மானித்தார். தான் மணக்கக்கூடிய பெண்கள் யார் யார் இருக்கிறார்கள் என்று பட்டியல் எடுத்தார். அவ்ரகள் பெயர்களை வரிசையாக எழுதி, அதன் எதிரில் அவர்களுடைய நல்ல குணங்கள், கெட்ட குணங்கள் என்ன என்ன என்று குறிப்பிட்டுக்கொண்டார். பிறகு, கூட்டிக்கழித்து எந்தப்பெண்ணுக்கு அதிகமான நல்ல குணங்கள் இருப்பதாகத் தெரிந்ததோ அவளையே மணந்தார். ஆனால், முதல் மனைவியைக் கோயில் கட்டி கும்பிடலாம் என்று எண்ணும் அளவுக்குக் கெப்ளிளரின் வாழ்க்கையை நாசமாக்கினாள் இரண்டாவது மனைவி.

மொத்தத்தில அவரும் நானும் சொல்றது இதைத்தான் விஞ்ஞானத்தை நம்பாதீங்க!

### அடிக்கடி தங்கள் ஜேர்மன் நாட்டு சட்டதிட்டங்களை மாற்றிக் கொண்டிருக்கிறார்களே...நான் இங்கே புதிதாக வந்திருக்கும் அகதி... என்ன செய்யலாம்?

-சதீஸ், ஜேர்மனி-

என்ன செய்யலாம்...கனடாவுக்கு ஓடலாம் அல்லது இங்கிலாந்துக்கு பாயலாம்... அல்லது...



ஒரு சர்வாதிகார நாட்டில் ஒரு பெண்மணி இரண்டு பசுமாடுகள் வைத்திருந்தாள். தன் வீட்டு உபயோகத்துக்குப்போகப் பால் மிஞ்சியிருந்தால் அதைக் கடைக்கு விற்றாள்.

ஓர் அதிகாரி வந்து அப்படி விற்பது சட்ட விரோதம் என்று தெரிவித்தார். மறுநாள் முதல் அந்த அதிகப்படி பாலை அக்கம் பக்கத்தில் இருப்பவர்களுக்கு இலவசமாக வழங்கினாள்.

மறுபடியும் அதிகாரி வந்தார். "உங்கள் கீழே வேலை பார்ப்பவர்களுக்கு மட்டும்தான் இலவசமாகப் பால் தரலாம். மற்றவர்களுக்குத் தரக்கூடாது" என்றார்.

"சரி, மிஞ்சுகிற பாலைக் கீழே கொட்டவேண்டியதுதான்" என்றாள் அந்தப்பெண்.

"ஐயோ! பாலை அப்படி வீணடிப்பது சட்ட விரோதம்" என்றார் அதிகாரி.

"பின்னே என்னதான் செய்யட்டும்?"

"உங்களுக்கு எவ்வளவு பால் தேவையோ அவ்வளவு மட்டும் கறந்து கொள்ளுங்கள்" என்று அதிகாரியிடமிருந்து பதில் வந்தது.

நானும் அதைத்தான் சொல்கிறேனுங்க...!

ஆவணி-2000, வருடம்-08, இதழ்-45

"கலைகளிலே ஈடுபாடுடையவன் கவலைகளை மறக்கிறான்"




## மெஞ்ஞானம் - விஞ்ஞானம் எது சிறந்தது?

### ஐரோப்பாவில் வாழ்க்கை வெறுத்து பொறுப்பற்று திரியும் இளைஞர்களுக்கு தாங்கள் கூறவிரும்புவது...?

-ம. கணேசமூர்த்தி, ஜெர்மனி-

எனது காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கும், அன்மையில் கேட்ட ஒரு பாடலின் வரிகள் இவை:

"தேடல் உள்ள உயிர்களுக்கே தினமும் பசியிருக்கும்... தேடல் என்பது உள்ளவரை வாழ்வில் ருசியிருக்கும்!"

இந்த இரண்டு வரிகளே போதும் என்று நினைக்கிறேன்.

### 25 பவுணில் தாலியைக்கட்டி புதுமையாக எதையோ செய்து விட்டதாக எண்ணி, பெண்களை அடிமைப்படுத்தும் ஆண்களைப்பற்றி...?

-பெயர் குறிப்பிட விரும்பவில்லை-

திருமணத்தில் பழமை புதுமை என்றில்லை. இடுப்பில் தாலி கட்டினால் அது புதுமை. கழுத்தில்தானே தாலி கட்டுகிறோம்? ஒருவர் கண் இல்லாமல் கை இல்லாமல் வாழ்ந்து விடலாம். ஆனால், கழுத்து இல்லாமல் வாழ முடியாது. அதனால்தான் கழுத்தில் தாலி கட்டுகிறோம். கணவனை பற்றிய எண்ணம் நிறைந்து இருப்பதால்தான் நெஞ்சில் தாலி தொங்கும்படி கட்டப்படுகிறது.

(சந்தோஷம்மா, உதயமூர்த்தி, த.தவராஜா ஆகியோரின் கேள்விகளுக்கு பதில் அடுத்த இதழில் எதிர்பார்த்திருங்கள்)

வாசகர்களிடமிருந்து ஜனரஞ்சகமான பதில்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. சிறப்பான கேள்வியொன்றுக்கு ஆறு மாத இளைஞன் சந்தாவை இலவசமாக வழங்கவுள்ளோம். தங்கள் கேள்விகளை ஒவ்வொரு மாதமும் 25 ம் திகதிக்கு முன்னர் எமக்கு கிடைக்கக்கூடியதாக அனுப்பி வையுங்கள் பார்க்கலாம்.

## சிகரெட் கம்பெனிகளுக்கு ரூ.61/2 லட்சம்கோடி அபராதம்

தனிமனித பாதிப்புகளுக்கு இழப்பீடு கோரும் வழக்குகளில் நீதிமன்றங்கள் பாதிக்கப்பட்ட நபருக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கும்.

வழக்கறிஞர் நான்சி ஸ்டான்லி ரோசன்பிளாட் அமெரிக்கா வின் சுமார் 5 லட்சம் நோயாளிகள் சார்பில் சிகரெட் கம்பெனிகள் மீது மிகப்பெரிய இழப்பீட்டு வழக்கை நடத்தி வந்தார். சிகரெட் கம்பெனிகள் தலைக்கு மேல் கத்தி போல அந்த தீர்ப்பு தொங்கிக் கொண்டு இருந்தது. வழக்கறிஞர் நான்சி ரோசன்பிளாட், ரூ.5,41,200 கோடியில் இருந்து ரூ.8,65,920 கோடி வரை இழப்பீடு கேட்டு இருந்தார்.

இந்த வழக்கின் தீர்ப்பு உலக சிகரெட் கம்பெனிகளை எல்லாம் மிரட்டிக்கொண்டு இருந்தது. வெள்ளிக்கிழமை இதில் நீதிபதி ஆணை பிறப்பித்தார். ரூ.6லட்சத்து 38 ஆயிரம் கோடி அபராதம் விதித்து கோர்ட்டு உத்தரவு பிறப்பித்து உள்ளது.

# அறிவியல் உலகம்

## அணு ஆயுதம்

அணு ஆயுதங்கள் தேவைதானா? அணுவை பிளந்த அறிஞன் ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் அணுஆயுத உற்பத்தியை பற்றி நினைத்திருப்பாரா அரசியல் காழ்ப்புணர்ச்சி யில் அமெரிக்காவிற்கும், ரஷியாவுக்கும் பிறந்த பனிப்போர்தான், ஐன்ஸ்டீனின் நீ=டு2- ஐ அணு குண்டு ஆராய்ச்சியாக மாற்றியது. அணுவை பிஸ்ஸன் மற்றும் பியூஸன் என இரு வகையாக பிரிக்கலாம். பிஸ்ஸன் முறையில் அணுகுண்டு களும், பியூஸன் முறையில் சூரிய சக்திக்கு இணையான தெர்மோ நியூக்ளியர் பாம்பீகளும் தயாரிக்கப்படுகின்றன. அணு மூலக்கூறுகளை பிளக்கும் முறைக்கு பிஸ்ஸன் என்றும், ஒன்றோ டொன்று ஒட்ட வைக்கும் முறைக்கு பியூஸன் என்று பொருளாகும். உலகிலேயே முதன் முதலாக இந்த இரு முறைகளும் அமெரிக்காவால் பயன்படுத்தப்பட்டன. 1945-ல் பிஸ்ஸன் முறையைக் கையாண்ட அமெரிக்கா லிட்டில் பாய் மற்றும் பேட் மேன் என்ற இரு குண்டு களை தயாரித்தது. இவ்விரு குண்டுகளும்தான் 1945-ல் கிரோஷிமா, நாகசாகி என்ற பழமை வாய்ந்த ஜப்பானிய நகரங்களை பாழாக்கின. அதே அமெரிக்கா 1953-ல் பியூஸன் முறையில் அணுகுண்டு ஒன்றை பிகினி எனப்படும் பசிபிக் கடல் பகுதியில் சோதனை செய்தது. இவ்விரு முறைகளிலும் 1949, 1960லேயே ரஷ்யா சோதனை செய்துவிட்டது.

## மூலக்கூறு ரகசியம்

அணு ஆயுத உற்பத்திக்கு யுரேனியம் மற்றும் புளுட்டோனியம் போன்ற மூலக்கூறுகள் பயன்படுத்தப்படுகின்றன. யுரேனியம் கடலோர மணலிலிருந்து எடுக்கப்படும் ஒருவித தாது ஆகும். யுரேனியத்தை பயன்படுத்தும்போது ஏற்படும் கழிவுப் பொருளிலிருந்து கிடைப்பதே புளுட்டோனியம். இந்த இரு மூலக்கூறுகளும் ஏராளமான சக்தியை கொடுக்க தகுந்த முறையில் பக்குவப்படுத்தப்படுகின்றன. து235 மற்றும் 239 எனப்படும் இந்த மூலக்கூறுகளே அணு குண்டு தயாரிக்க பயன்படுகின்றது. இது வரையில் சுமார் 5 லட்சம் கி.கி. யுரேனியமும், 1 லட்சம் கி.கி. புளுட்டோனியமும் அணுகுண்டு தயாரிக்க அமெரிக்காவால் பயன்படுத்தப்பட் டுள்ளன. ரஷியா சுமார் 1 லட்சம் கி.கி. யுரேனி யத்தை அணுகுண்டு தயாரிப்பிற்கு பயன்படுத்தியுள்ளது. 1992-ம் ஆண்டு கணக்கெடுப்பின் படி உலகத்தில் மொத்தம் 100 டன் புளுட்டோனியமும், 2360 டன் யுரேனியமும் பதுக்கி வைக்கப்பட் டுள்ளன. அமெரிக்கா, ரஷியா, இங்கிலாந்து, பிரான்ஸ், சீனா மற்றும் இந்தியா போன்ற நாடுகள் யுரேனிய மற்றும் புளுட்டோனிய தொழில்நுட்பங்களில் சிறந்து விளங்குகின்றன.

## அணுகுண்டு அபாயம்

அணுகுண்டுகளின் தொழில்நுட்பம் அதன் தன்மையை பொருத்து மாறுபடுகின்றன. 1945-ல் இரண்டாம் உலகப் போரில் கொழுத்த மனிதன் மற்றும் சின்னப்பையன் என்ற குண்டுகள் பயன் பட்டதே, அவை முறையே 9 ஆயிரம் பவுண்ட் எடையுள்ளவை. இவ்விரு குண்டுகளிலும் சுமார் 15 கிலோ டன் எடையுள்ள அணு அழிவு எரி பொருட்கள் அழுத்தி வைக்கப்பட்டிருந்தன. மேலும் ஒரு அணுகுண்டின் தன்மை அது அழிக்க வேண்டிய தாக்கு மையத்தை பொருத்தும் வேறுபடுகிறது. பெரிய தாக்கு மையங்களை அழிக்கவல்ல ஏவுகணைகள் மிகுந்த அணு அழிவு எரிபொருட்களை கொண்டதாக இருக்க வேண்டும். உதாரணத்திற்கு, ஒரு டிஸீ ஏவுகனை யில் அடக்கி வைக்கப்பட்டுள்ள அணுஅழிவு சக்திகள் 350 கிலோ டன் எடையளவாகும். கிரோஷிமாவில் வீசப்பட்ட 20 கிலோ டன் எடையுள்ள அணுகுண்டு 1.2 மைல் தூரத்திற்கு அழிவை ஏற்படுத்தியது. ஆனால், இன்று மைனூட்மேன் ஏவுகணையில் 170 கிலோ டன் எடையுள்ள அணு அழிவுச் சக்திகள் பொருத்தி வைக்கப்பட்டுள்ளன. இந்த ஏவுகணையின் அணுகுண்டுகள் 800 அடி தூரத்திற்குள் தாக்கு மையங்களின் அருகில் பாய்ந்து சுமார் 2.2 மைல் தூரத்திற்கு நாசத்தை ஏற்படுத்தும். அமெரிக்காவின் சக்திவாய்ந்த டாஸி போன் நீர் மூழ்கி கப்பலில் வைக்கப்பட்டுள்ள ஒரு அணுகுண்டு 14 டோக்கியோ அல்லது நியூயார்க் போன்ற நகரங்களை ஒரே சமயத்தில் தகர்க்கவல்லது. நவீன காலத்தொழில் நுட்பத்தி னால் உருவான இன்றைய அணுகுண்டுகளில் முதன்மை வகிப்பது நியூட்ரான் பாம். இது சிதறியடிக்கப்பட்டால் எல்லா உயிர்களும் கண்ணிமைக்கும் நேரத்தில் பஸ்பமாகிவிடும். ஆனால் கட்டிடங்கள், சுற்றுப்புறச்சூழல் அழிக்காது விட்டுவைக்கும். எனவே, இது ஒரு உயிர்க்கொல்லி அணுகுண்டு எனப்படுகிறது.

## அணுஆயுத கப்பல்களும், விமானங்களும்

தொடர்ச்சி 22 ம் பக்கம்

**கொலண்ட் மாநகரில் மக்கள் மனங்கவர்ந்த ஒரே ஸ்தாபனம்!**

**San's Asian Market**

**மளிகைப்பொருட்கள், கடலுணவு வகைகள், அன்பளிப்புப் பொருட்கள், ஓடியோ, சி.டி, திரைப்படங்கள் அனைத்தையும் ஒரே கூரையின்கீழ் பெற்றுக்கொள்ள:**

San's Asian Market,
Dapper Plein 36, GS
Amsterdam
Tel: 020 - 6943408

**சண்ஸ் ஆசியன் மாக்கற்றின் சேவைகள் தொடர்கின்றன...**

**கணேசன் ஜுவல்ஸ் அன் ரெக்ஸ்ரைல்ஸ் கண்ணைக்கவரும் டிசைன்களில் தங்கநகைகளைப் பெற்றுக்கொள்ளவும், அனைத்து வகையான புடைவைத்தேர்விற்கும் விஜயம் செய்யுங்கள்!**



**கணேசன்**

**ஜுவல்ஸ் அன் ரெக்ஸ்ரைல்ஸ்**

# பாதி... பா தி ...




**பு**லவருடன் இரு நண்பர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள்.

**அவர்களில் ஒருவர் சொன்னார் 'ஆள் பாதி ஆடை பாதி' என்று சொல்வது அனுபவம் நிறைந்த உண்மையாகும். நேற்று எனக்கு வேண்டிய ஒருவருடன் விழா ஒன்றுக்கு சென்றிருந்தேன்** தேன். என்னுடன் வந்த நண்பர் மிக நாகரீகமாக ஆடை அணிந்திருந்தார்.. எனவே அவருக்கு அந்த விழாவில் தனி வரவேற்பு கிடைத்தது. சாதாரணமாக தோன்றிய என்னை விழா குழுவினர் யாரும் கண்டு கொள்ள வில்லை' என்றார்.

அதை கேட்டு கொண்டிருந்த புலவர் தன் கருத்தை கூறினார்.

'ஆடை பாதி ஆள் பாதி என்பது நீங்கள் சொல்லுவது மாதிரி நல்ல அனுபவ மொழியே ஆகும்! எடுத்த எடுப்பிலே நம்மை ஒரு புது இடத்தில் மரியதைக்குரியவனாக ஆக்குவது நாம் அணிந்து இருக்கும் ஆடைதான். அதற்கு மேல் நாம் தகுதி உடையவராய் இருந்தால் கிடைத்த மரியாதையை தக்க வைக்கலாம். ஆக முதலில் நமக்கு மரியாதை கிடைக்க ஆடை உதவுவது ஒரு பாதி வேலை. அதற்கு மேல் கிடைத்த மரியதையை பூர்த்தி செய்வது நமது தகுதியின் பாதிவேலை! இதைவைத்தே ஆடை பாதி ஆள் பாதி என்றார்கள்.

ஆடையை மட்டும் மிக நாகரீகமாக அணிந்து கொண்டு வேறு எந்த தகுதியும் இல்லாதிருந்தால் அதனால் நமக்கு கிடைத்த மரியாதை தானாக போய் விடும். அதாவது பாதியிலே மரியாதை போய்விடும் என்பதாலும் ஆடை பாதி என்றார்கள். அது போல நாம் பார்க்கிற **வேலைக்குதக்கபடி உடை அணியாமல் அதில் அசட்டையாக இருந்தால் அந்நிலையில் நமக்கு கிடைக்கிற மரியாதையும் அரை குறையாகவே இருக்கும் அதனால்தான் அங்கெ ஆளுக்கு மதிப்பும் பாதியாக குறைகிறது.**

பொதுவாக நமக்கு ஆடையை பொறுத்தும் நமது மரியாதை காப் பாற்றப்படுவதாக எண்ணம் இருப்பதால் சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப நாம் ஆடை களை தேர்ந்தெடுத்து அணிய வேண்டி யிருக்கிறது.

நாம் தூங்கி எழும் பொழுது இடுப்பில் ஒரு லுங்கியும், உடம்பில் ஒரு பணியனும் அணிந்திருப்போம். அந்த சமயம் நமது வீட்டு துப்புரவு தொழிலாளியோ, அல்லது ஒரு வேலை யாளோ நம்மை பார்ப்பதற்கு வந்திருந் தால் நாம் படுக்கையில் இருந்து எழுந்த கோலத்திலேயே அவர்களை சந்திக்க வந்து விடுகிறோம். அதே சமயம் நம்மை பார்க்க நமக்கு சம தகுதியுள்ள ஒரு நண்பன் வந்திருக்கிறான் என்று அறிந்தால் நாம் கழற்றி போட்டிருந்த சட்டையை போட்டு கொண்டு அவனைப் பார்க்க வருவோம். அதே நேரம் நமக்கு மரியாதைக்குரிய **உறவினரோ அல்லது யாரோ ஒரு அதிகாரியோ நம்மிடம் ஏதோ கேட்க வந்திருக்கிறார்களென்று கேள்விப்பட்டால் உடனே முகத்ததை அலம்பி தலைசீவி பெட்டியில் இருந்து நல்ல** வேட்டியும் சட்டையும் அணிந்து கொண்டு அவர்களை பார்க்க வருவோம். **இப்படி ஆட்களுக்கு தக்கபடி நாம் ஆடை அணிவதிலும் நமது மரியாதை காக்கப் படுவதாக நம்புகின்றோம்.**

**ஆனால் நமது தகுதியை நாம் உயர்த்தி கொண்டால், அதற்கு மேல் நாம் அணிகிற ஆடையை பொறுத்து நம்மை** மதிக்கிற வழக்கம் எல்லாம் போய்விடும். எவ்வளவு எளிமையாக உடை அணிந் **திருந்தாலும் நமது தகுதி உயரந்து விட்டால் ஆடையின் எளிமை கூட மரியாதையையே அதிகப்படுத்தும்.**

காந்தியடிகள் தனது தகுதியை மிக மிக உயர்த்தி விட்டதால் அவர் அணிந் திருக்கும் ஆடையைப்பற்றி யாரும் கவலைப்பட வில்லை. தொழு நோயாளிக்கு சிகிச்சை அளிப்பதற்கும் மலம் அள்ளி அசுத்தங்களை களைந்து சுத்தபடுத்துவதற்கும் அவர் இடுப்பிலே ஒரு வேட்டியையும் உடம்பிலே ஒரு துண்டும் போட்டுக் கொண்டு அந்த பனிகளை அவர் செய்தார். அதே உடையில்தான் உலகமகா சக்கரவர்த் தியான ஐந்தாம் ஜார்ஜ் மன்னரை பார்க் கவும் சென்றார். காந்தி என்றதுமே மிகப் பெரிய மகான் என்ற எண்ணம். பிறருக்கு தானாக ஏற்பட்டதால் அதற்கு மேல் அவர் அரை நிர்வாண பக்ரியாக உடை அணிந்திருப்பது பற்றி யாரும் பெரிது படுத்தவில்லை.

ஆடை பாதி ஆள் பாதி என்பதற்கு நம்மை பொறுத்தவரை, ஆடையும் சரியாக இருந்து நாம் ஆளும் சரியாக இருந்தால்தான் மதிக்கப்படுவோம் என்பது பொருளாகும். காந்தியடிகளை பொறுத்தவரை ஆடை பாதி ஆள் பாதி என்பதற்கு பொருள். பாதி உடையுடன், பாதி உடம்பு தெரிய அவர் காட்சி அளித்ததை குறிப்பிடும்! மனிதன் பிறந்த பின்னே வந்ததுதான் ஆடை! அவன் இறந்த பின்னும் நீடிப்பதே அவன் மாண்பு!

என்றார் புலவர்.

> **"ஆடை பாதி ஆள் பாதி" என்பது நல்ல அனுபவ மொழியாகும். எடுத்த எடுப்பிலே ஒரு புது இடத்தில் மரியாதைக்குரியவ னாக ஆக்குவது நாம் அணிந்து இருக்கும் ஆடைதான்!**

## விமானத்தை இயக்கிப்பார்த்த மனநோயாளி

ஆஸ்திரேலியாவில் உள்ள சிட்னி நகர விமான நிலையத்தில் நியூசிலாந்து நாட்டுக்கு சொந்தமான போயிங் 767 பயணிகள் விமானம் நின்று கொண்டு இருந்தது. அப்போது மன நலம் குன்றிய ஒரு 46 வயது ஆசாமி அந்த விமா னத்தின் விமானி அறைக்குள் ரகசியமாக ஊடுருவி விமான கட்டுப்பாட்டு கருவிகளை இயக்கிப் பார்த்துக் கொண்டிருந்தார். விமானத் தின் துப்பரவு பணியாளர்கள் அதை பார்த்து அதிர்ச்சியடைந்து அதிகாரிகளுக்கு தகவல் கொடுத்தனர். அதையடுத்து மனநோயாளி கைது ஆனார். சிட்னியில் ஒலிம்பிக் போட்டி தொடங்க இன்னும் 2 மாதமே உள்ள நிலையில் இந்த சம்பவம் நடந்திருப்பது குறிப்பிடத் தக்கது. மனநோயாளி அனைத்துவித பாதுகாப்பையும் தாண்டி விமான நிலையத்துக்குள் ஊடுருவி இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இறைச்சி தின்னும் ஈக்கள்

ஹாங்காங்கில் செல்லப் பிராணிகளை வளர்ப்பவர்களுக்கு தற்போது ஒரு புதிய பிரச்சினை தோன்றி உள்ளது. இங்கு ஒருவகை ஈக்கள் படையெடுக்கத் தொடங்கி உள்ளன. அவைகள், நாய், பூனை போன்ற செல்லப் பிராணிகளைத் தாக்கி அவற்றின் இறைச்சியைத் தின்கின்றனவாம். அந்த ஈக்களுக்கு இதுவரை 10 நாய்களுக்கு மேல் பலியாகி உள்ளன. அந்த ஈக்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால் அவற்றிற்கு இரையாகும் பிராணிகளின் எண்ணிக்கையும் உயரும் என்று கால்நடை டாக்டர்கள் தெரிவித்து உள்ளனர். இத்தகைய ஈக்கள் இதற்கு முன்பாக மலேசியா, இந்தோனேசியா, இந்தியா, தென் ஆப்ரிக்கா, அமெரிக்கா ஆகிய நாடுகளில் காணப்பட்டனவாம்.

## பறவைக்கு இறுதி அஞ்சலி

இலங்கைத் தலைநகர் கொழும்பு அருகே உள்ளது இஹிலியகொடா என்ற நகரம். இங்கு உள்ள ஏழைச் சிறுவர்களுக்கான பள்ளிக் கூடத்தின் நிறுவனர் ஒரு மைனாவை வளர்த்து வந்தார். சம்பவத்தன்று அந்த மைனா ஒரு மின்சார கம்பியில் மோதி பரிதாபமாக செத்தது. அந்த மைனாவுக்கு பவுத்த மத சம்பிரதாயப்படி இறுதி மரியாதைகளுடன் அடக்கம் செய்வது என்று அதன் உரிமையாளர் தீர்மானித்தார். அதன்படி பவுத்த மத சாமியார்கள் உள்பட பலர் அந்த மைனாவின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டனர்.

## விண்வெளியில் பயன்படும் பால்புட்டி

விண்வெளியில் புவி ஈர்ப்பு விசை கிடையாது. ஆகவே திரவப்பொருள் எதையும் விண்வெளியில் நாம் குடிக்க முடியாது. இந்த நிலையில் விண்வெளிக்கு செல்பவர்கள் கைக்குழந்தை ஒன்றை உடன் அழைத்து சென்றால் அந்த கைக் குழந்தை பால் குடிப்பதற்காக விசேஷ பால்புட்டி ஒன்றை பிரான்ஸ் நாட்டு பெண்மணி ஒருவர் கண்டுபிடித்துள்ளார். விண்வெளிக்கு சாதாரண பால் புட்டிகளை எடுத்துச் சென்றால் பால் உறிஞ்சுவதில் சிக்கல் ஏற்படும். அந்த சிக்கல் இந்த புதிய பால் புட்டியில் கிடையாது. இதை கண்டுபிடிக்க ரூ. 6 லட்சம் செலவாகி இருக்கிறது. இந்த பால்புட்டியை கண்டுபிடித்த பெண்மணி 2 குழந்தைகளுக்கு தாய் என்பது குறிப்பிடத்தக்கது.

## இறைச்சி உனவு தின்னும் இயந்திர மனிதன்

உலகில் பலவகையான எந்திர மனிதன் (ரோபோ) தயாரிக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இவற்றை இயக்குவதற்கான சக்தி பாட்டரியில் இருந்து கிடைக்கிறது.
இப்போது கேஸ்ட்ரோபோ என்ற புதுவகையான எந்திர மனிதனை தெற்கு புளோரிடா பல்கலைக்கழகத்தை சேர்ந்த வில்கின்சன் என்பவர் தயாரித்து உள்ளார். இது 12 சக்கரங்களுடன் ரெயில் போன்ற அமைப்புக்கொண்டது. மைக்ரோ பியூஸ் செல்லினால் இயங்குகிறது.
இந்த எந்திர மனிதனுக்கு இறைச்சி மற்றும் காய்கறிகள் உணவாக கொடுக்கப்படுகிறது. எந்திர மனிதனில் உள்ள செல் ஒருவித என்சைம்களை உருவாக்கி இந்த உணவு பொருட்களில் உள்ள ஹார்போ ஹைட்ரேட்டுகளை பிரித்து சக்தியை உருவாக்கி கொடுக்கிறது.
மேற்கு இங்கிலாந்து பல்கலைக்கழகம் தயாரித்து உள்ள எந்திர மனிதனின் உணவு வகைகளை விட கேஸ்ட்ரோபோ எந்திர மனிதனின் உணவு வகைகள் கண்ணியமானது என்று கூறுகிறார்கள். மேற்கு இங்கிலாந்து பல்கலை தயாரித்த எந்திர மனிதன் கூடு நீக்கிய நத்தைகளை சாப்பிடுகிறதாம்.
எந்திர மனிதர்களுக்கு இறைச்சி ருசி காட்டுவது எதிர்காலத்தில் அவை மனிதர்களையே பிடித்து சாப்பிடும் நிலை வரலாம் என்று வேடிக்கையாக கூறுகிறார், வில்கின்சன்.

## 90 ஆண்டுகளுக்கு முன்பு மூழ்கிய டைட்டானிக் கப்பலை மீட்கும் பணி தொடக்கம்

**வட அட்லாண்டிக் கடலில் 90 ஆண்டுகளுக்கு முன்பு மூழ்கிக் காவியம் ஆகிவிட்ட டைட்டானிக் கப்பலின் இடிபாடுகளை மீட்கும் பணி தொடங்குகிறது. அக் கப்பலின் இடிபாடுகளை மீட்கும் உரிமையை ஆர்எம்எஸ் டைட்டானிக் என்னும் நிறுவனம் பெற்றுள்ளது. இந் நிறுவனத்தைச் சேர்ந்த மீட்புக் குழுவினர் இதுவரை அக்கப்பலின் வெளிப்பக்கத்தில் தான் ஆய்வுகளை மேற்கொண்டனர். இனிமேல்தான் அக் கப்பலுக்கு உள்ளே நுழைய வேண்டும் என்று அந் நிறுவனத்தின் தலைவர் ஆர்னி கெல்லர் கூறினார்.**

---

தெரு விளக்குகள்
தினம், தினம் தேடுகின்றன...
இன்னொரு ஆபிரஹாம் லிங்கனை!

க.நா.கல்யாணசுந்தரம்-

---


Visit: www.ilaignan.com
ஈழத்தமிழர்களின் இதயக்கிளர்ச்சி: .com
இளைஞன்
sekar@ilaignan.com

சினிமா உலகம்



சினிமாவில்

# ஒட்டிக் கொண்ட பட்டங்கள்

**சிவாஜி கணேசன்** - சிவாஜி கணேசன் என்று முதலில் அழைத்தவர் தந்தை பெரியார். வி.சி. கணேசன் இவரது சொந்தப் பெயர், சத்ரபதி என்னும் நாடகத்தில் மராட்டிய மன்னன் வீரசிவாஜி பாத்திரத்தை செய்த நாளிலிருந்து சிவாஜி கணேசன் எனப்பட்டார்.

**ஆரூர் தாஸ்** இயற்பெயர் யேசுதாஸ். திருவாரூர் - இவரின் சொந்த ஊர். இவருடைய குருநாதர் தஞ்சை ராமையாதாஸ் இவ்வாறு அழைத்தார்.

**ஜெமினி கணேசன்** எஸ்.எஸ். வாசனின் ஜெமினி நிறுவனத்தில் முதன் முறையாக அக்கவுண்டன்ட் வேலை பார்த்ததால் ஜெமினி கணேசன் என்று வைத்துக் கொண்டார்.

**டெல்லிகணேஷ்** டெல்லியில் இராணுவத்தில் பணியாற்றிய பின் கலைத்துறைக்கு வந்ததால் இந்த டெல்லி பட்டம் கணேஷுக்கு ஒட்டிக்கொண்டது.

**குண்டு கல்யாணம்** உடல் உருவம் மற்றும் சொந்த பெயர் சேர்ந்ததால் இப்பெயர்.

**மௌனம் ரவி** மௌனம் என்ற பெயரில் கையெழுத்து பத்திரிகை ஒன்றை நடத்தி வந்ததால் முதலில் மௌனம் கே. ரவிச்சந்திரன் என்று அழைக்கப்பட்ட திரை பத்திரிகை தொடர்பாளரான ரவி மௌனம் ரவி ஆனார்.

**வெண்ணிற ஆடை மூர்த்தி** - வெண்ணிற ஆடை நிர்மலா இவர்களுடைய முதல்படமும் இயற்பெயரும்.

**ஏ.வி.எம். ராஜன்** ஏ.வி.எம். நிறுவனத்தார் முதலில் நானும் ஒரு பெண் படத்தில் இவரை நடிக்க வைத்தனர். அதிலிருந்து ராஜனாக இருந்தவர் ஏவி.எம்.ராஜன் ஆனார்.

**மேஜர் சுந்தர்ராஜன்** மேஜர் சந்திரகாந்த் என்ற படத்தில் வந்த மேஜர் கேரக்டரை ஏற்று நடித்த நாளிலிருந்து மேஜர் சுந்தர்ராஜன் எனப்படுகிறார்.

**சௌகார் ஜானகி** சௌகார் என்ற தெலுங்குப்படத்தில் அறிமுகமாகி அப்படத்தின் பெயரைத் தன் பெயரின் முன்சேர்த்துக் கொண்டார்.

**குமரி முத்து** சொந்த ஊர் கன்னியாகுமரி ஆதலால் குமரிமுத்து.

**தக்காளி சீனிவாசன்** கல்லூரியில்கூட இவருக்கு தக்காளி ( குண்டு உடல் உருவம் ) தான் பட்டப் பெயர். அத்துடன் இவர்கள் வருங்காலத் தூண்கள் படத்தில் தக்காளிஎனும் கேரக்டரில் நடித்தார்.

**யார் கண்ணன்** இயற்பெயர் சக்திக் கண்ணன். யார் எனும் படத்தை இயக்கினார். பிறகு சக்தி இருந்த இடத்தில் யார் தொற்றிக் கொண்டது.

**மலேசியா வாசுதேவன்** மலேசியா நாட்டிலிருந்து இந்தியா வந்து செட்டிலானதால் கிடைத்த பெயர் மலேசியா வாசுதேவன்.

**கறுப்பு சுப்பையா** - வெள்ளை சுப்பையா திரை உலகில் அறிமுகமாகும் போது இரண்டுபேருமே சுப்பையாதான். ஒரு அடையாளத்திற்காக அவரவர் நிறங்களை வைத்து இப்படி நிற வேற்றுமைப் படுத்தப்பட்டனர்.

**கலைப்புலி தாணு** தன்னுடைய தயாரிப்பு நிறுவனத்தின் பெயரை முதற் பெயராக வைத்துக்கொண்டார் தாணு.

**நிழல்கள் ரவி** நிழல்கள் என்ற படத்தின் மூலம் திரை உலகில் அறிமுகமானவர் இயற்பெயர் ரவி.

**என்னெத்த கன்னையா** நான் எனும் படத்தில் என்னத்த பண்ணி என்னனெத்த செஞ்சி என்று எதற்கெடுத்தாலும் என்னெத்த என்ற வார்த்தையைச் சொன்னார். அதிலிருந்து இவரும் என்னெத்த கன்னையா ஆனார்.

**பக்கோடா காதர்** மதராஸ் டு பாண்டிச்சேரி திரைப்படத்தில் பக்கோடா கேட்டு அழுதுகொண்டும், பக்கோடா சாப்பிட்டு கொண்டும் இருந்த காட்சி பிரபலமானதால் பக்கோடா காதர் ஆனார்.

**ஒருவிரல் கிருஷ்ணாராவ்** ஒரு விரல் என்ற த்ரில்லிங் படத்தில் நடித்ததிலிருந்துதான் இவருக்கு ஒரு விரல் (கிருஷ்ணாராவ்) என்ற பெயர்.

**குட்டி பத்மினி** முதலில் குழந்தை நட்சத்திரமாகத்தான் அறிமுகமானார். எற்கெனவே பத்மினி என்ற நடிகை இருந்ததாலும் இவர் குழந்தை நட்சத்திரமாக அறிமுகமானதாலும் குட்டி பத்மினி என்று அழைக்கப்பட்டார்.

**ஓமக்குச்சி நரசிம்மன்** தன் பெயரைத் தமிழ் சினிமா ரசிகர்கள் நினைக்கும் போதெல்லாம் தன்னுடைய தோற்றம் (ஓமக்குச்சி) சட்டென நினைவுக்கு வரவேண்டும் என்பதற்காக தன் பெயரின் முன் ஓமக்குச்சியைச் சேர்த்துக் கொண்டார்.

**ராம்போ ராஜ்குமார்** ராம்போ என்ற ஆங்கிலப்படத்தின் கதாநாயகன் மேல் ஏற்பட்ட ஈர்ப்பாலும் அவரின் சண்டைக் காட்சிகளின் யுக்திகளால் கவரப்பட்டவர் என்கிற காரணங்களாலும் தன் பெயருக்கு முன் ராம்போவைச் சேர்த்துக் கொண்டார்.

**ஜாக்குவார் தங்கம்** ஜாக்குவார் என்பது ஒரு கருஞ்சிறுத்தை. வேகமாகப் பாயக்கூடியது. அதன் அடிப்படையில் தன்னை ஜாக்குவார் தங்கம் என மாற்றி கொண்டார்.

**சூப்பர் சுப்பராயன்** மோனைக்காகத்தான் சண்டை மாஸ்டர் சுப்பராயன், சூப்பர் சுப்பராயன் ஆனார்.

**கனல் கண்ணன்** கண்ணனுக்கு முன்னால் கனல் சேர்ந்ததுக்கும் மோனை தான் காரணம்.

**ஜூடோ ரத்தினம்** பல விதமான சண்டை வகைகளில் ஜூடோ ஒருவிதம், அதில் ரத்தினம் ஸ்பெஷலிஷ்ட்.

**விக்ரம் தர்மா** இவர் சண்டைக் காட்சிகள் அமைத்த முதல் படம் விக்ரம். அதனால் விக்ரம் தர்மா என வைத்துக் கொண்டார்.

**மியூசிக் முருகேஷ்** (மீசை முருகேஷ்) திரை இசைக்குழுவில் இருந்துகொண்டே நடிக்க வந்ததால் கிடைத்த பெயர் மியூசிக். மீசையும் பெரியது.

**குன்றத்தூர் பாபு** குன்றத்தூர் - பாபுவின் சொந்த ஊர்.

**பயில்வான் ரங்கநாதன்** எம்.ஜி.ஆர்.தான் முதன்முதலில் இவரை இப்படி அழைத்தவர். உண்மையிலேயே இவர் பயில்வான்.

**பூர்ணம் விசுவநாதன்** தந்தையின் பெயர் பூர்ணம் - வானொலியில் செய்தி வாசிப்பாளராகப் பணியாற்றியபோது (1945-65) 1946-இல் பெயர் அறிவிக்கும் முறை வந்தது. அப்போது பூர்ணம் என்பது இயற்பெயரோடு சேர்ந்து கொண்டு நிரந்தரப் பெயராகிவிட்டது.

**காத்தாடி ராமமூர்த்தி** தான் நடித்த நாடகத்தில் பாத்திரத்தின் பெயர் காத்தாடி. அதனால் ராமமூர்த்தி என்ற பெயரின் முன் சினிமா உலகில் காத்தாடி ராமமூர்த்தி என நிலைத்துவிட்டது.

# அணு ஆயுதம்...

அட்லாண்டிக், பசுபிக், ஆர்க்டிக் மற்றும் இந்துமகா சமுத்திரத்திலும் ஆயிரக்கணக்கான அணுகுண்டுகளை தாங்கிய நீர் மூழ்கிக் கப்பல்கள் வலம் வருகின்றன. இவை மாதக் கணக்கில் கடலில் மூழ்கியவாறு பயணம் செய்யும் சக்தி வாய்ந்தவை. உதாரணமாக, பிரான்ஸ் நாட்டின் நீர் மூழ்கிக் கப்பல்கள் ஆறு மாதத் திற்கு கடலினுள் மூழ்கிப் பயணம் செய்ய வல்லன. இந்த நீர் மூழ்கிக் கப்பல்கள் எதிராளிகளின் ராணுவ மற்றும் ஆகாய படைகளின்று தப்பித்து எதிரி நாட்டின் அருகாமையில் சென்று தாக்குபவை.

## ஏவுகணை வரலாறு

அணுஆயுத தொழில்நுட்பக் கலாச்சாரத்தில் முதன்மை வகிப்பது ஏவுகணையாகும். இவற்றின் தொழில்நுட்பம் செயற்கைகோள் தொழில்நுட் பத்திலிருந்தே பிறந்தது. முதன்முதலாக 1948-ல் தார் மற்றும் ஜூபிடர் ஏவுகணைகள் அமெரிக்கா வால் செய்யப்பட்டன. 1957-ல் ஸ்புட்னிக் என்ற செயற்கை கோளின் விளைவால் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகள் தோன்றலாயிற்று. பியூஸன் தொழிநுட்பம் பிரபலமானதால் அணு ஆயுத வரலாற்றில் பல மாற்றங்கள் நிகழ்கின்றன. இத்தொழில்நுட்ப முன்னேற்றத்தினால் சிறு சிறு அணுகுண்டுகள் உற்பத்தி செய்யப்பட்டு எந்த இடத்திற்கும் எடுத்து செல்லும் வசதி ஏற்பட்டுள் ளது. எதிர்ப்பு ஏவுகணைகள் தொழில் நுட்பமும் 21-ம் நூற்றாண்டில் வலுப்பெற வாய்ப்புண்டு. இலக்குகளைத் தாக்க வரும் ஏவுகணைகளை எதிர்த்து அவைகளை வானிலேயே இடைமறித்து அழித்து விடுவதால் இது எதிர்ப்பு ஏவுகணைகள் எனப்படுகிறது. இத்தொழில்நுட்பத்தை பின் பற்றியே அமெரிக்கா நட்சத்திர போரை 1983-ல் பிரகடனப் படுத்தியது. செயற்கைக்கோள் மூலம் விண்ணிலேயே இலக்கு நோக்கி வரும் எதிராளிகளின் ஏவுகணைகள் இடைமறித்து தகர்ப்பதால் இதற்கு இப்பெயரிடப்பட்டது. மேற்சொன்ன தொழில்நுட்பங்கள் அனைத் தையும் பாதுகாப்பு செயல்களில் அமெரிக்கா பயன்படுத்த முயற்சிப்பதால் இத்திட்டத்திற்கு நீண்ட கால பாதுகாப்பின் ஆரம்பம் என்று பெயர் சூட்டப்பட்டது. எவ்வாறாயினும் அணு ஆயுதம் மற்றும் ஏவுகணை தொழில்நுட்பங் களினால் ஏராளமான பொருளாதார விரயம் ஏற்பட்டு கொண்டிருப்பதே உண்மை. இதனால், மூன்றாம் உலக நாடுகளின் முன்னேற்றம் தடைபடுத்தப் படுவதை மறுக்க முடியாது. இத்தொழில்நுட்பங்களை யாராயினும் ஆக்கப் பூர்வமான பணிகளுக்கு பயன்படுத்துவதே நிஜமான மனித நேயமாகும்.

---

அன்பைப் போதிக்கும்
கடவுள்கள்
கையில் ஆயுதத்துடன்!

மு.ரமேஷ்-

## நாக்கு

நாக்கு நமக்கு நார்களால் உருவான உறுப்பாகும். நாம் உண்ணும் உணவை சுவைத்து உண்ணவும், விரும்பும் ஒலிகளை எழுப்பவும், சொற்களை திருத்தமாக உச்சரித்து பேசவும் நாக்கு உதவுகிறது. நாக்கின் பின்பகுதி எலும்புகளோடு இணைந்திருக்கும். நாக்குத் தசையின் மீது வழவழப்பான உமிழ்நீர் எப்போதும் படிந்திருக்கும், நாக்கில் எலும்புகள் இல்லாததால் நீட்ட, வளைக்க ஏதுவாகிறது. நாக்கில் நாற்புற ஓரங்களிலும் சுவை அரும்புகள் உள்ளன. இது ஒவ்வொரு வகை சுவையை அறிய உதவுகின்றன. நாக்கின் பின்பகுதி மூலம் கசப்பு சுவையை உணரலாம். நாக்கின் நடுப்பகுதி மூலம் எந்த சுவையையும் அறிய இயலாது. அங்கு சுவை அரும்புகள் இல்லை.

---

## பூர்வீகம் தனைக்காக்க புலிக்கொடியை ஏற்றிவிடு!

அன்னை மடியிருத்தி ஆயிரம் கதை சொல்லி
சொன்னதெல்லாம் பொய்யாமோ
சோம்புவது ஏனடா?
கண்ணை இமை காக்கம் கடமைதனை நீ மறந்து
அன்னியனின் தாழ் பணிந்து
அடிமைகளாய் வாழ்வதுமேன்?
முன்னைய முதுமொழிகள் மூதறிஞர் பொன்மணிகள்
இன்னமும் வாழுதடா இன்னும் ஏன் தூக்கமடா
வில், மீன் புலிக்கொடிதான் விண்ணுயரப் பறந்ததடா
தன் மானம் தனைக்காத்து தமிழ்வீரம் உயர்ந்தடா
சேர சோழ பாண்டியர்கள் செருகளத்தில் வளர்த்த வீரம்
சோரமாய்ப் போகவில்லை துணிந்து நீ களம் ஏறு
அன்னை தந்த பாலிலே அமிர்தமடா வீரமணம்
அவள் சொன்ன கதைகூட அழியாத காவியமோ?
தாய் மாமன் போர் தொடுக்க தன்மகனைக் களமனுப்பி
போர்க்கோலம் பூட்டி வைத்த பொன்மகளும் தமிழ்மகளே
மூவேந்தர் ஆண்ட கதை முத்தமிழ் வளர்த்தகதை
பாவேந்தர் பாட்டினால் பரிசில்கள் பெற்றகதை தேர்ச்சில்லால் நசியுண்டு
நிதைந்த பசுக்கன்றுக்காய்
தன் மகனை அதுபோல் கொன்றானே மனுச்சோழன்
ஆண்டனர் மன்னர் உயர்நீதி பாண்டியன் புகழோ-அதுகோடி
தன்மானம் தனைவிற்று தமிழ்மண்ணை தான் மறந்து
அடிமையாய் அகதிகளாய் வாழ்வதிலும் அழிவதுமேல்
ஆண்ட இனம் மீண்டும் ஈழம் ஆழுமடா, ஆழுமடா
பூர்வீகம் தனைக்காக்க புலிக்கொடியை ஏற்றிவிடு.

சைஸ் பாபு, கொலண்ட்

---


# புதிய சந்தாதாரர்களுக்கு இரண்டு இதழ்கள் இலவசம்!

கையிலிருந்தால் பெருமை: படித்துப் பார்த்தால் அருமை!

கதைகளில் இனிமை: அரசியலில் நடுநிலை: செய்திகளில் சமுதாயப் பார்வை!

Largest Circulation in Europe
இளைஞன்

சந்தா படிவம்

இளைஞனைத் தேடி நீங்கள் செல்லத் தேவையில்லை. இளைஞன் இனி உங்களைத் தேடி வருவான்!

அதற்கு நீங்கள் செய்ய வேண்டியது இதுதான். கீழே உள்ள விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்து - அதற்கான பணத்தை காசோலையாவோ, தபால் கட்டளையாகவோ அல்லது கீழே உள்ள வங்கிக் கணக்கிற்கோ அனுப்பி வையுங்கள்.

உங்களுடைய
பெயர் : ..............................
முகவரி : ..............................
..............................
தொ.பேசி: ..............................

ஒருவருட சந்தா - (தபாற்செலவுடன்) சகல நாடுகளுக்கும் 25 டீ.எம் மட்டுமே!

**வங்கி இலக்கம்:**
R. JEYASEKARAN
Konto.Nr: 273022401
BLZ: 500 800 00
DRESDNER BNK
FRANKFURT/M

**முகவரி:**
"ELAIGNAN"
C/O - R. JEYASEKRAN
Ginnheimer Str, 24 A
60487 Frankfurt/M
Germany.

ஒவ்வொரு பக்கமும் ரசனை: ஒவ்வொரு வரியிலும் எளிமை!


இளைஞன்

ELAIGNAN
Ginnheimer Str, 24a
60487 Frankfurt/M
Germany

Tel: 069-70760470
E-Mail: sekar@elaignan.de
Internet: www.elaignan.de

1089/09
http://www.thamizham.net
FREE E - BOOKS (TAMIL)
பொன்னாச்சி நகர்

மக்களின் சகல தேவைகளையும் பூர்த்தி செய்ய
நீங்கள் நம்பிக்கையுடன் நாடவேண்டிய ஸ்தாபனம்!
லிங்கம் ஏசியன் மாக்கற்
ஜவுளி அகம்
தங்க மாளிகை
மளிகைப் பொருட்கள்
வீடியோ விஷன்
Lingam Asian Market
Adler Str 5, 44137 Dortmund, Tel: 0231/143811



# விபத்துக்கு நாசவேலை காரணமா?

113 பேர் பலியான பிரான்சு விமானத்தின் கறுப்பு பெட்டிகள் மீட்பு

விபத்துக்கு நாசவேலை காரணமா?

பாரிஸ், ஜூலை - பிரான்ஸ் நாட்டின் தலைநகர் பாரிசில் இருந்து அமெரிக்காவில் உள்ள நியூ யார்க்கிற்கு நேற்று முன்தினம் ஒரு விமானம் புறப்பட்டது. இந்த விமானம், பிரான்ஸ் ஏர்வேசுக்கு சொந்த மானதாகும். கன்கார்டு வகையை சேர்ந்த சூப்பர் சோனிக் ஜெட் விமானம் ஆகும்.
இந்த விமானத்தில் 100 பயணிகளும், விமானிகள் உள்பட 10 விமான பணியாளர் களும் இருந்தார்கள். விமானத்தில் இருந்த 100 பயணிகளும் ஜெர்மனியை சேர்ந்தவர்கள் ஆவார்கள். அவர்கள் உலகச் சுற்றுலாவுக்காக அமெரிக்கா வுக்கு செல்ல திட்டமிட்டிருந்தார்கள்.
பாரீசில் இருந்து புறப்பட்ட இந்த விமானம், சார்லஸ் டி கால் விமான நிலையத்திலிருந்து புறப்பட்ட சில நிமிடங்களி லேயே தடுமாறத் தொடங்கியது. நடுவானில் அந்த விமானத்தில் என்ஜின் பகுதி தீப்பற்றிக் கொண்டது. ஆகவே அந்த விமானத்தை விமானிகள் மீண்டும் தரை இறக்க முயற்சித்தார்கள். அதற்குள் தரையில் விழுந்து நொறுங்கியது.

காரணம் என்ன?

இந்த விமான விபத்திற் காரணம் என்னவாக இருக்கும் என போலீசார் விசாரணை நடத்தி வருகிறார்கள். ஒரு வேளை நாசவேலை காரணமாக இருக்குமோ? என்ற கோணத்தில் விசாரணை நடக்கிறது.

கறுப்புபெட்டி மீட்பு

இதற்கிடையில் விமான சிதைவுகளில் இருந்து 2 கறுப்பு பெட்டிகள் நேற்று மீட்கப்பட்டன. இந்த கறுப்பு பெட்டிகளில் பதிவானவற்றை அறிந்து கொள்ள முயற்சி நடக்கிறது. இதை வைத்து விபத்துக்கான காரணம் என்ன என்பது கண்டு பிடிக்கப்படும்.

விமானம் ரத்து

பிரான்சு போக்குவரத்து மந்திரி ஜுன்-கிளாவுட்-கேசாட் கூறுகையில், ''விபத்துக்கான காரணம் என்ன என்பது கண்டுபிடிக்கப்படும் வரை விமானங்கள் நிறுத்தி வைக்கப்படும் என்றார்.
அவர் மேலும் கூறுகையில், எந்த நிலையில் உள்ளது என் பதை கண்டுபிடிக்கும் பணி நடக்கிறது. அந்த பணி முடிவடைந்ததும் விமான போக்கு வரத்து தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.
இதற்கிடையில் பிரிட்டிஸ் ஏர்வேஸ் நிறுவனம் கன் கார்டு விமான சர்வீசை லண்டன்-நியூயார்க் இடையே தொடங்கியது

**இந்த இதழில் இருந்து ஆரம்பமாகிறது 'உங்கள்' சேகரின் கேள்வி-பதில்கள்**

(பக்கம் 18)

சிந்துநதி பதிப்பகம்

திருமண வாழ்த்து மடல்கள். பிறந்தநாள் விழா அழைப்பிதழ்கள். விளம்பர துண்டுப்பிரசுரங்கள். போன்ற அச்சுப்பதிப்பு வேலைகளுக்கும். விளம்பர போர்ட்டுகள். கோயில் திரைச்சீலைகள். உருவப்படங்கள் போன்ற சகலவிதமான ஓவிய வேலைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்:

சிந்துநதி பதிப்பகம்: 069-70760470, 0170-4074933